## தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம்

# ஆண்டறிக்கை

# 2017

NIOSH

National Institute of Occupational Safety and Health • Sri Lanka

# தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம்

**கௌரவ டபிள்யூ.டீ.ஜே.செனவிரத்ன**

அமைச்சர் - தொழில், தொழிற் சங்க உறவுகள் மற்றும் சப்பிரகமுவ அபிவிருத்தி அமைச்சு

**கௌரவ ரவீந்திர சமரவீர**

இராஜாங்க அமைச்சர் - தொழில், தொழிற் சங்க உறவுகள் மற்றும் சப்பிரகமுவ அபிவிருத்தி அமைச்சு

**திரு. நிமல் சரணதிஸ்ஸ**

தொழில், தொழிற் சங்க உறவுகள் மற்றும் சப்பிரகமுவ அபிவிருத்தி அமைச்சு

தவிசாளர் - தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம்

**டாக்டர்.என்.சி.அமரசிங்க**

பணிப்பாளர் நாயகம், தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம்

**கணக்காய்வுக் குழு**

- டாக்டர்.என்.சி.அமரசிங்க - பணிப்பாளர் நாயகம், தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம்
- திரு.எம்.ஹெட்டியாராய்ச்சி – தலைவர், கணக்காய்வு குழு மற்றும் பணிப்பாளர் தேசிய திட்டமிடல் திணைக்களம் அமைச்சு
- திரு. ஜயதிலக – அவதானிப்பாளர், கணக்காய்வு அத்தியேட்சகர், கணக்காய்வாளர் நாயகம் திணைக்களம்
- திருமதி சிறியாணி - உள்ளகக் கணக்காய்வாளர், தொழில், தொழிற் சங்க உறவுகள் மற்றும் சப்பிரகமுவ அபிவிருத்தி அமைச்சு
- பி.எம்.கே.பெரேரா – உதவிப் பணிப்பாளர், தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம்

**வங்கி**

மக்கள் வங்கி – நாரஹென்பிட்டி

**பொருளடக்கம்..............................**


| | | |
|---|---|---|
| | அறிமுகம் | 05 |
| | தொலைநோக்கு, செயற்பணி மற்றும் குறிக்கோள்கள் | 07 |
| | அமைச்சரின், செயலாளரின் மற்றும் பணிப்பாளர் அதிபதியின் செய்திகள் | 8-12 |
| | தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் பணிப்பாளர்கள் சபை | 17-19 |
| | நிறுவகத்தின் கட்டமைப்பு | 20 |
| | தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் குறிக்கோள்கள் | 21-22 |
| | தே.தொ.பா.சு.நிறுவகத்தினால் நடத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்பாடுகள் | 23-24 |
| | 2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நடத்தப்பட்ட பயிற்சிகள், பயிற்சிப்பட்டறைகள் மற்றும் கருத்தரங்குகள் | 25-36 |
| | ✦ **பயிற்சிகள்** | |
| | தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தில் தேசிய டிப்புளோமா | 25-27 |
| | தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாத்தில் சான்றிதழ் | 27-28 |
| | சுகாதார பாதுகாப்பு, கழிவு முகாமைத்துவம் மற்றும் அனர்த்த தயார்ப்படுத்தல் - 10 நாள் நிகழ்ச்சித்திட்டம் | 29 |
| | நிருமாணத்தில் பாதுகாப்பு - இரண்டு நாள் நிகழ்ச்சித்திட்டம் | 29 |
| | கழிவு முகாமைத்துவம் - ஒரு நாள் நிகழ்ச்சித்திட்டம் | 29 |
| | கொதிகலன் பாதுகாப்பு - ஒரு நாள் நிகழ்ச்சித்திட்டம் | 30 |
| | தொழிற்றுறை தாதிகள் - ஒரு நாள் நிகழ்ச்சித்திட்டம் | 30 |
| | ஆடைக் கைத்தொழில் மேற்பார்வையாளர்களுக்கான பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் | 30 |
| | தீங்கிளைக்கின்ற தொழிற்றுறைகளுக்கான பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் - ஒருநாள் நிகழ்ச்சித்திட்டம் | 30 |
| | மட்டுப்பாடான இடம் மற்றும் பாதுகாப்பும் சுகாதாரமும் - ஒருநாள் நிகழ்ச்சித்திட்டம் | 30 |
| | மேற்பர்வையாளர்களுக்கான தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் | 30 |
| | தொழில்சார் முதலுதவி - ஒரு நாள் நிகழ்ச்சித்திட்டம் | 31 |
| | நிருமாணத்தில் பாதுகாப்பு - மூன்று நாள் நிகழ்ச்சித்திட்டம் | 31 |
| | இலத்தினரியலில் பாதுகாப்பு - இரண்டு நாள் நிகழ்ச்சித்திட்டம் | 31 |
| | இரசாயனத்தில் பாதுகாப்பு - ஒரு நாள் நிகழ்ச்சித்திட்டம் | 32 |
| | OSHA 18001 - ஒரு நாள் நிகழ்ச்சித்திட்டம் | 32 |
| | **இந்த ஆண்டு காலப்பகுதியில் நடத்தப்பட்ட பயிற்சிப்பட்டறைகள்** | 33-39 |
| | ஊடக மாநாடு | |
| | தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார மாநாடு | |
| | டிப்புளோமா சான்றிதழ் வழங்கும் வைபவம் - பட்டமளிப்பு | |

| | | |
|---|---|---|
| | **தொழில் புரிவதற்கான உடற்றகுதி மருத்துவ முகாம்** | 39-45 |
| | ➢ அவிசாவெல்லை ஏற்றுமதி ஊக்குவிப்பு வலையத்தில் தொழில் புரிவதற்கான உடற்றகுதி மதிப்பீடு<br>➢ கொக்கல்ல ஏற்றுமதி ஊக்குவிப்பு வலையத்தில் தொழில் புரிவதற்கான உடற்றகுதி மதிப்பீடு<br>➢ கட்டுநாயக ஏற்றுமதி ஊக்குவிப்பு வலையத்தில் தொழில் புரிவதற்கான உடற்றகுதி மதிப்பீடு | |
| | **ஆராய்ச்சிக் கருத்திட்டங்கள்** | 50-53 |
| | **சி.எஸ்.ஆர் கருத்திட்டங்கள்** | |
| | இரத்தினபுரி மாவட்டத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான மருத்துவ முகாம்<br>தொழில்சார்ரீதியில் அங்கவீனமுற்றுப் பாதிக்கப்பட்டவர்களுக்கு புனர்வாழ்வளித்தல் | 53-57 |
| | **தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரக் கற்கைகள் நூலகம்** | 61 |
| | **எமது வாடிக்கையாளர்கள்** | 62 |
| | நிதிப் பகுப்பாய்வு 2016-2017 | 63-67 |

# தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம்

## அறிமுகம்

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகமானது, நாட்டில் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார ஆசாரத்தை விருத்தி செய்கின்ற குறிக்கோளுடன் தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சில் கொள்கையை உருவாக்குகின்ற நிறுவனமாக 2005 ஏப்பிரல் மாதத்தில் தாபிக்கப்பட்டிருந்தது. இந்நிறுவகத்தின் பொறுப்பாணை இந்நிறுவகமானது, நாட்டில் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தில் விழிப்புணர்வினை உருவாக்குதல், பயிற்சியளித்தல் மற்றும் அதன் மீதான ஆய்வுகளை மேற்கொள்வதாகும். தற்போது தொழில்சார் அமைப்பொன்றாக இயங்கி வேலைத்தல சுகாதாரம் மற்றும் பாதுகாப்பின் முன்னேற்றத்திற்காக அர்ப்பணித்துள்ளது. தகவல் வழங்குதல், பயிற்சியளித்தல், கல்வி ஆராய்ச்சி, ஆய்வுகள், தீர்வுகள் மற்றும் வேலையாற்றுகின்ற சூழல்களில் வளமான பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தை உறுதிப்படுத்துகின்ற முகாமைத்துவ முறைமைகள் என்பவற்றினூடாக இலங்கையில் தொழிலாளர் வர்க்கத்தின் மொத்த பௌதீக, உள மற்றும் சமூக நலனை மேம்படுத்துவதற்கான தேவையை அடிப்படையாகக்கொண்டு நிறுவப்பட்டுள்ளது.

இலங்கையின் தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சின் கீழ் 2009 ஆம் ஆண்டில் பெற்றுக் கொள்ளப்பட்ட நியதிச்சட்ட அதிகாரங்களைக் கொண்டுள்ள தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகமானது, இடர்களை மதிப்பிடுவதில் விழிப்புணர்வினை அதிகரிப்பதற்கு பணியாளர்கள் மற்றும் தொழில்தருநர்களுக்கு வலுவளிப்பதுடன், அவர்களது பணியாளர்களதும், ஏதேனும் தாபனங்களில் இருக்கின்ற அக்கறைதாரர்களது சுகாதாரப் பாதுகாப்பையும், சேமநலனையும் செம்மைப்படுத்துவதில் உலக தரத்திலான தீர்வுகளையும் நடைமுறைப்படுத்துகின்றது.

எந்தவொரு நாட்டினதும் நிலையான பொருளாதார அபிவிருத்தியைக் கட்டியெழுப்புகின்ற சக்தி ஆரோக்கியமான தொழிலணியே என்பது நாம் அனைவரும் அறிந்ததே. அத்துடன், தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகமானது, இலங்கை முழுவதும் பாதுகாப்பான ஆசாரமொன்றை உருவாக்கி, பாதுகாப்பாக, ஆரோக்கியமாக வேலையாற்றும் சூழலிலிருந்து பணியாற்றுவதற்கு தனிப்பட்டவர்களது அடிப்படை மனித உரிமைகளை மேம்படுத்துவதுடன், தொழிலுடன் தொடர்புபட்ட நோய்களையும் தடுக்கின்றது.

வேலை வாழ்க்கையின் சமநிலையை அனைத்துப் பணியாளர்களும் பேணுவது மிகவும் முக்கியமானதாகும். ஆனால் வேலை அழுத்தம் ஒருவரின் வாழ்க்கையிலும் ஒட்டுமொத்தச் சமூகத்திற்கும் பாதகமான விளைவினத் தருகின்றது. பணியாளர்களிடையே சிறந்த வேலை நிபந்தனைகளின்மை, சிறந்த செய்முறைகளின்மை, பாதுகாப்பற்ற பழக்கவழக்கங்கள் மற்றும் பாதுகாப்பற்ற செயல்கள் காரணமாக வேலையுடன் தொடர்புபட்ட விபத்துக்கள் மற்றும் நோய்கள் அதிகரிக்கின்றன. இந்தக் காரணிகள், 8.7 மில்லியன் இலங்கை தொழிலணிக்கிடையில் உயர் மட்டத்திலான வருகையின்மையையும் புரள்வு வீதத்தையும் விளைவாக்குகின்றது.

இந்நிறுவகமானது, உரிய சுகாதாரம் மற்றும் பாதுகாப்புத் தலைப்புகள் பற்றி தாபனங்கள் மற்றும் அக்கறை தாரர்களுக்கிடையே நீடித்த கலந்துரையாடலை ஊக்குவித்து, ஆதரவளிக்கின்றது. தொழில்சார் ஊறுகள் காரணமான பொருளாதார செலவீட்டினை கட்டுப்படுத்திக் குறைத்தல், வேலைத்தலங்களில் உற்பத்தித் திறனைச் செம்மைப்படுத்துதல், ஆரோக்கியமான, ஊக்குவிக்கப்பட்ட தொழில் அணியொன்றை உருவாக்குதல் போன்றவற்றிற்காக தனிப்பட்டவரின் பொறுப்பினை ஊக்குவிக்கின்றது.

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகமானது, தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார சவால்களைத் தெரிவிக்கின்ற தாபனங்களுக்கு உதவுகின்ற தகவல்கள், கருவிகள் மற்றும் வளங்களுடன் கூடிய ஆற்றல்களை வழங்கு தொழிற்றுறை நிபுணர்களினால் நடத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் அதிகளவில் கவனஞ்செலுத்தி வழங்குகின்றது. இந்த முயற்சிகள், தேசிய மற்றும் சர்வதேச நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள் மற்றும் தொடர்புகளையும், வலையமைப்பையும் நிறுவு வதற்கும், இந்த விடயம் தொடர்பில் மேலும் ஆய்வுகளையும், ஆராய்ச்சிகளையும் மேற்கொள்வதற்கும் ஏனைய தாபனங்களுடன் இணைவதன் மூலம் நிறைவுசெய்கின்றது.

இந்நிறுவகமானது, மருத்துவ பரிசோதனைகள், பாதுகாப்பு மற்றும் சுகாதார இடர் மதிப்பீட்டாய்வுடன் இணங்கி சூழல் கண்காணிப்பும் பயிற்சியும் மற்றும் பாரிய பிராந்திய அளவீடு, மன்றங்கள், மாநாடுகள் மற்றும் வலையமைப்பு நிகழ்வுகள் அத்துடன் ஆரோக்கியமானதும் அதிக பொருத்தமானதுமான வேலை செய்முறைகள் போன்றவற்றிற்கு உதவுகின்றது.

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகமானது, பாகுபாடற்ற உலக தரத்திலான தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார சேவையை எப்போதும் வழங்குகின்றதொரு நிறுவகம் என்பதுடன், தொழில்சார் விபத்துக்கள் மற்றும் நோய்களைக் குறைக்கும் நோக்கத்துடன் பாதுகாப்பான, சுகாதாரமான வேலைச் சூழலை உருவாக்குவதுடன், சுய நிதியிடல் நிறுவகமொன்றாக நிறுவி நிலையாக இருப்பதற்கு கவனஞ்செலுத்துகின்றது.

மிகவும் வெற்றிகரமான முறையில் மேலுள்ள செயற்பாடுகளை ஆற்றுவதன் மூலம் வாடிக்கையாளர் களின் உச்ச திருப்திக்காக அவர்களுக்கு ஆக்கத்திறன்சார் சேவையை வழங்க முடிந்துள்ளதென்பதை தெரிவிப்பதில் நாம் மிகவும் மகிழ்ச்சியடைகின்றோம். 2009 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகச் சட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள குறிக்கோள்களை நிறைவேற்றுகின்ற அதி உயர் இலக்கு குறுகிய காலப்பகுதியில் அடையப்பட்டுள்ளமை பாரிய வெற்றி யென்பதையிட்டு நாம் பெருமைப்பட முடியும். தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் சேவைகளை நிலையாக பல நிறுவனங்கள் பெற்றுள்ளன என்ற இந்த உண்மையை பின் தொடர்ந்து செய்யப்படுகின்ற ஆய்வு நிரூபிக்கின்றது.

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகமானது, அனைத்து சுதந்திர வர்த்தக வலைய தொழிற்றுறைகளுக்கிடையிலும் அதேபோன்று உற்பத்தித் துறை, புடைவை மற்றும் ஆடை உற்பத்தித் துறை, விவசாய துறை போன்ற அத்தகைய அனைத்து தொழிற்றுறைகளிலும் பணியாளர்களின் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தைச் செம்மைப்படுத்துவதில் அவர்களது தேவைகளின் அடிப்படையில் மிகவும் வெற்றிகரமான சேவையை வழங்கி ''தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் முத்திரையைப்'' பதிக்க முடிந்திருந்தது.

## தொலைநோக்கு ......................

"அனைவருக்கும் தொழில்சார் பாதுகாப்பு, சுகாதாரம் மற்றும் நலனோம்பலை வழங்குதல்"

## செயற்பணி ........................

‘‘“ வேலைத்தலத்தின் பாதுகாப்பினையும் சுகாதாரத்தையும் உறுதிப்படுத்தும் மற்றும் உற்பத்தித்திறனை செம்மைப்படுத்தும் பொருட்டு அனைத்து வகையான தொழில்வாய்ப்புத் தடைகளையும் தடுப்பதற்குரிய கல்வி, பயிற்சி மற்றும் ஆராய்ச்சி என்பவற்றினூடாக முத்தரப்பு அக்கறைதாரர்களையும் வலுப்படுத்துதல்”

**கௌரவ தொழில், தொழில் உறவுகள் மற்றும் சப்பிரகமுவ அபிவிருத்தி அமைச்சரின் செய்தி**



தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகமானது, 2005 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 28 ஆம் திகதி தாபிக்கப்பட்ட நியதிச்சட்டக் கூட்டுத்தாபன அமைப்பொன்றாகும். ஆனால் நியதிச்சட்ட தத்துவங்கள், இலங்கை தொழில் உறவுகள் மற்றும் மனிதவலு அமைச்சின் கீழ் 2009 ஆம் ஆண்டு காலப்பகுதியில் 2009 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க பாராளுமன்றச் சட்டத்தினால் வழங்கப்பட்டிருந்தன. தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகமானது, அனைத்துத் தொழிற்றுறைகளிலும், அனைத்துப் பணியாளர்களிடையேயும் பாதுகாப்பான வேலைச் சூழலை சீர்ப்படுத்தி, பேணி, நிரந்தரமானதாக்குவதற்கு தன்னை அர்ப்பணிக்கின்ற அமைச்சிலிருக்கின்ற கொள்கையை ஆக்குகின்ற ஒரேயொரு நிறுவனமாகும். தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்புப் பற்றிய விழிப்புணர்வினை உருவாக்குவது, பயிற்சியளித்தல் மற்றும் ஆய்வு செய்தல், நாளதுவரைப்படுத்தப்பட்ட தகவல்களைப் பரப்புதல், ஆலோசனை வழங்குதல் மற்றும் உசாவலர் சேவைகள் தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் பணிப்பாணையாகும். தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகமானது, தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றிய விழிப்புணர்வினை ஏற்படுத்தி, தகைமையுள்ள பாதுகாப்பு அலுவலர்களுக்கு தொழில்சார் பயிற்சியை வழங்கி மற்றும் தனது தொழில்சார் சேவைகளுடன் தொழிற்றுறையின் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிலையைச் செம்மைப்படுத்தி நாடு பூராவும் மிகவும் தொழில்சார்ரீதியில் தனது பணிப்பாணையை நிறைவேற்றி வருகின்றது என்று தெரிவிப்பதில் தொழில், தொழிற் சங்க உறவுகள் மற்றும் சப்பிரகமுவ அபிவிருத்தி அமைச்சராக நான் பெருமைப்படுகின்றேன்.

கடந்த சில ஆண்டுகளாக தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தினால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள், இலங்கையில் ஆரோக்கியத்தையும், ஆரோக்கியமான தொழில் அணியொன்றையும் உருவாக்குவதிலும் அதனது அர்ப்பணிப்பினைக் காட்டியுள்ளன. தொழில்சார் பாதுகாப்பான வேலைச் சூழலைக் கட்டியெழுப்புவதில் தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ள அர்ப்பணிப்பினை நான் பாராட்டுகின்றேன்.

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தை முன்னெடுப்பதில் ஓய்வில்லாது பங்களிப்பு நல்கியிருந்த தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் பணிப்பாளர் அதிபதி உள்ளடங்கலாக அனைத்துப் பணியாளர்களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**டபிள்யு.டீ.ஜே.செனவிரத்ன**



**தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத் தவிசாளர் அவர்களின் செய்தி**

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் தவிசாளராக, இந்நிறுவகத்தின் முன்னேற்றத்தைக் காட்டுகின்ற இந்நிறுவகத்தின் 2017 ஆம் ஆண்டுக்கான ஆண்டறிக்கையை மிகவும் பெருமையுடன் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கின்றேன். இந்த ஆண்டறிக்கை, நிறுவனம்சார் அபிவிருத்தி மற்றும் பாதுகாப்பான வேலை ஆசாரத்தை உருவாக்குவதில் தொழிற்றுறைக்கு வழங்கியுள்ள அதன் அர்ப்பணிப்புடைய சேவைகள் பற்றிய தகவல்களை வழங்குகின்றது. தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் ஆண்டறிக்கை 2017, அதன் தளாராத முயற்சியையும், இலங்கையில் தொழில்சார் விபத்துக்களைக் குறைப்பதற்கு, தொழிற்றுறையில் பணியாளர்களின் நடத்தையில் மாற்றத்தை நோக்கிய அனைத்துப் பதவியினரின் ஈடுபாட்டினையும் காட்டுகின்றது.சர்வதேச தொழில் தாபனத்தின் அண்மைய புள்ளிவிபரங்களின்படி, வருடாந்தம் உலகளாவியரீதியில் 2.3 மில்லியன் இறப்புகள் தொழில் புரிகையில் இடம்பெறுகின்றது. அதிகளவான இறப்பு வீதம் ஏனையவை தொழில்சார் ஊறுகளின் காரணத்தினால் இருக்கையில், சுமார் 2 மில்லியன் இறப்புகள் தொழிலுடன் தொடர்புபட்ட நோய்களால் ஏற்பட்டுள்ளன. ஊறு மற்றும் நோய்களுடன் தொடர்புபட்ட வேலை பொருளாதாரச் செலவு நாட்டில் உள்நாட்டுப் பொருளாதார உற்பத்தியில் 1.8 – 6% என்பதற்கிடையில் மாறுபட்டு சராசரியாக 4% என மதிப்பிடப்படுகின்றது.

விபத்தொன்று அல்லது ஊறு ஏற்படுவதனை ஏற்படுத்தக்கூடிய நிலைமைகளுக்கு வேலை

யாளர்களின் சொந்தப் பண்புகள், குடும்ப நிலைமை, வீட்டுச் சூழ்நிலை, வேலைக்கு வரும் போது இடம்பெறும் நிகழ்வுகள், உபகரணத்தின் வகைகள், பயன்படுத்தியுள்ள சாதனங்கள் போன்று பல காரணிகள் பங்களிப்புச் செய்கின்றன. உதாரணமாக, களைப்பு, மன அழுத்தம் மற்றும் சத்தம், சுத்தமின்மை, வெளிச்சம் போதாமை, பாதுகாப்பான உபகரணம் இன்மை, உபகரணங்களைப் பயன்படுத்துகையில் பயிற்சி போதாமை, கவனமின்மை, நேரம் போன்ற அத்தகைய வேலை நிலைமைகள் சரியின்மை அத்துடன் பிற வேறு காரணிகளும் விபத்தொன்றில் பங்கு வகிக்கின்றன. ஆகவே, நாம் பணியாளர்கள், தொழில்தருநர்கள் அனைவரும் இந்த நிலைமைகளை மிகவும் தீவிரமாக நோக்க வேண்டும் என்பதுடன் தொழில்சார் விபத்துக்கள் மற்றும் நோய்களைத் தடுப்பதில் ஈடுபடுதலும் வேண்டும்.

**தொழில்சார் ஊறுகளைத் தடுப்பது என்பது தெழில்தருநர்கள், பணியாளர்கள் மற்றும் அரசு ஆகிய முத்தரப்பினதும் இணைந்த பொறுப்பாகும்.**

இந்நாட்டில் பாதுகாப்பாக தொழில் புரிகின்ற ஆசாரத்தை உருவாக்குவதற்கு தொழில்நுணுக்க ஆதரவினை வழங்குவதில் தலைமைத்துவத்தை அரச தாபனமாக, எனது அமைச்சாகிய தொழில், தொழிற்சங்க உறவுகள் மற்றும் சப்பிரகமுவ அபிவிருத்தி அமைச்சினது தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம் எடுத்துள்ளது.

இறுதியாக, தொழில்சார் ஊறுகளைத் தடுப்பதில் புதிய உபாயங்களை செம்மைப்படுத்தி விருத்தி செய்வதற்கு பாரியளவு பங்களிப்புச் செய்துள்ள பதவியினருக்கு எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் முயற்சிகளுக்கு எனது நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நாட்டில் பாதுகாப்பான ஆசாரமொன்றை உருவாக்குவதில் எமது கரங்களை இணைப்போமாக !

**எஸ்.ஏ.என்.சரணதிஸ்ஸ**



**தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகப் பணிப்பளர் அதிபதியின் செய்தி**

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகமானது 2011 ஆம் ஆண்டில் எட்டு பதவியினருடன், தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தில் விழிப்புணர்வினை ஏற்படுத்துதல், பயிற்சியளித்தல் மற்றும் ஆய்வினை மேற்கொள்ளுதல் என்ற பொறுப்பாணையுடன் தாபிக்கப்பட்டு தனது செயற்பாடுகளை ஆரம்பித்திருந்தது.

2009 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்கச் சட்டத்தின்படி, இந்நிறுவகத்திக் குறிக்கோள்கள் குறிப்பிடப்பட்டுள்ள துடன், இதன்படி, நிறுவகத்தின் ஆரம்ப நிலைகளில் நிறுவகத்தின் குறிக்கோள்களை அடைவதற்கான திறமுறைகள் உருவாக்கப்பட்டிருந்தன.

இந்நிறுவகத்தின் இலக்கு, சுய நிதியிடல் அமைப்பொன்றாக இருக்கையில் தொழிற்றுறைக்கு உலக தரத்திலான தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார சேவையொன்றினை வழங்குவதாகும். தேசிய பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம் எமது அனைத்து பங்குதாரர்களுக்கும் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார தகவலை வழங்குவதில் முன்னணியில் இருக்கின்றது.

தேசிய பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகமானது அது ஆரம்பிக்கப்பட்டு கடந்த சில ஆண்டுகளுக்குள் கருத்தரங்குகளை, பயிற்சியமர்வுகளை ஒழுங்கமைத்தல் மற்றும் பாதுகாப்பு அலுவலர்களைத் தகுதி யுள்ளவர்களாக்குதல் போன்ற அத்தகைய பல்வேறு செயற்பாடுகளை ஆற்றுவதனூடாக தொழிற்றுறை யினரிடையேயும், பொது மக்களுக்கிடையிலும் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றிய விழிப்புணர்வினை உருவாக்க முடிந்திருந்தது.

தேசிய பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகமானது, அது 2011 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து இலங்கையரின் தொழிலாற்றுகின்ற சூழலில் முக்கிய மாற்றங்களை ஏற்படுத்துவதற்காக அவர்களின் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தில் அறிவினையும், திறன்களையும் பகிர்ந்துகொள்வதற்கும், நாளதுவரைப்படுத்துவதற்கும் இலங்கையில் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தில் தொழில்சார் நிபுணர்களுக்கான முதல் அடித்தளமாக சேவையாற்றியுள்ளது. தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம், அனைவருக்கும் பாதுகாப்பான, சுகாதாரமான வேலைத்தலம் என்பதனை அடைவதற்குரிய பொதுவான அபிலாசையை நோக்கிய ஒழுங்கமைப்பாளர்கள், செய்முறையாளர்கள், நிபுணர்கள், அராய்ச்சியாளர்கள் மற்றும் விநியோகஸ்தர்களை ஒன்றாகக் கொண்டுவருகின்றது.

தேசிய பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகமானது, விழிப்புணர்வினை அதிகரிப்பதனூடாகவும், உரிய சுகாதார மற்றும் பாதுகாப்பு நடவடிக்கையையும் பின்பற்றுவதனூடாக அனைத்து மக்களுக்கும் பாதுகாப்பாக தொழில்புரிகின்ற வேலைச் சூழலை சீர்ப்படுத்தி, பேணி, நிரந்தரமானதாக்குவதற்கு தன்னை அர்ப்பணிக்கின்றது. தேசிய பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகமானது, எமது அனைத்து அக்கறைதாரர்களுக்கும் எப்போதும் மதிப்பளிப்பதுடன், தொழிற்றுறையின் தேவைப்பாடுகளினடிப்படையில் பாகுபாடற்ற, தொழில்நுணுக்க சேவைகளை வழங்குவதற்கும் உறுதிபூண்டுள்ளது. தொழில்நுணுக்கப்

பயிற்சியை வழங்குவதில், விழிப்புணர்வினை உருவாக்குவதில், வியாபாரத்தை தொழிற்படுத்துகின்றவர்களின் நியதிகளின்படி உயர் மட்டத்திலான தொழில்சார் சுகாதாரநலன் மற்றும் பாதுகாப்பான செய்முறைகள், தொழில்சார் நோய்களை மற்றும் தொழில்சார் விபத்துக்களைத் தடுத்தல் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார விளைவுகள் மீதான தாக்கம், மாணவர்களுக்குத் தேவையான தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரப் பயிற்சிக்கான ஏற்பாடு, தொழில் புரிவதற்கான உடற்றகுதி சேவைகளை வழங்குதல் மற்றும் சுற்றுப்புறச் சூழலைக் கண்காணிக்கின்ற சேவைகளை வழங்குதல் போன்றவற்றில் நாம் முன்னோடிகளாகத் திகழ்கின்றோம்.

எமது நிறுவகத்தினால் அளிக்கப்படுகின்ற பயிற்சிகள், வேலைத் தலங்களில் ஏனையவர்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துகின்ற அதேவேளையில் தொழில் புரிகையில் வேலையாளர்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்தும். தமது வேலைத் தலங்களில் இருக்கின்ற குறிப்பிட்ட தீங்குகளை இனங்காண்பதற்கு தனிப்பட்டவர்களையும் இயலச்செய்கின்றது.

நாம், எமது சேவைகளை வழங்குவதற்கு சிறந்த விஞ்ஞானம்சார் செய்முறைகளை, சிறந்த விஞ்ஞான அறிவினையும் வளங்களையும் மட்டுமே பயன்படுத்துகின்றோம். எமது சேவைகளை வழங்குவதற்கு அனுபவம் வாய்ந்த சிறந்த தகைமையுள்ள நிபுணர்களைப் பணிக்கமர்த்துவதன் மூலம் எமது சேவைகளின் சிறந்த தரத்தை நாம் பேணுகின்றோம். நாம், இலங்கையரின் எதிர்கால தொழிற்றுறையினை நோக்கி சிறந்த தரமான தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார சேவைகளை நாம் வழங்குகின்றோம்.

உள் நாட்டு தொழிற்றுறை, தொழில்தருநர்கள், பணியாளர்கள், சர்வதேச தொழில் தாபனங்கள், பல்கலைக்கழங்கள் மற்றும் உலக எண்ணக்கருத்துக்களுக்கமைவான தொழில்சார் சமூகத்துடன் பங்குடமையை ஏற்படுத்துவதில் தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சினைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்ற ஒரேயொரு அரசாங்க நிறுவகம் நாமாவோம். மேலும், நாம் தொழில்தருநர்கள், பணியாளர்கள் மற்றும் அனைத்துப் பங்குதாரர்களுடனும் பணிபுரிவதுடன், **அனைத்து முத்தரப்பு ஆக்கக் கூறுகளுடன்** தொடர்பினைப் பேணுவதற்காக எம்மை அர்ப்பணித்துள்ளோம்.

**டாக்டர்.என்.சி.என்.அமரதுங்க**

**எமது விழுமியங்கள்**

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் குறிக்கோள்கள் மற்றும் முக்கியமான அலுவல்களுடன் இணைந்ததாக, இந்நிறுவகம் தனது தோற்றத்தைப் பின்வருவனவற்றினூடாக வெளிப்படுத்துகின்றது:

### 1 COMMITMENT

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் பதவியினர் அனைவரும் தமது கடப்பாட்டினை ஆகக்கூடியளவில் ஆற்றுகின்றனர்.

### 2 TRANSPARENCY

வேலையுடன் தொடர்புபட்ட நடைமுறைகள் மற்றும் முறைமைகள் எப்போதும் வெளிப்படைத் தன்மையுடன் காணப்படுதல்.

### 3 TEAMWORK

குழுவாகப் பணியாற்றுதல் என்ற குறிக்கோள் அடையப்படுகின்றதென்பதை உறுதிப்படுத்தி, பதவியினர் அனைவரும் அதிகளவிலான அர்ப்பணிப்பினை வெளிப்படுத்துகின்றனர்.

### 4 HONESTY

இடைச் செயற்பாடுகள், போலித்தன்மை, தன்னிலையமைதி, ஏமாற்றுதல் போன்றவற்றிலிருந்து விடுபடுதல்.

### 5 PROFESSIONAL & PERSONAL INTEGRITY

தே.தொ.பா.சு.நிறுவகத்தின் பதவியினர், ஒழுக்கக் கோட்பாட்டு பண்புகளிலிருந்தான சேவை வழங்கலில் விசுவாசத்துடனும் நேர்மையுடனும் காணப்படுகின்றனர்.

### 6 QUALITY

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்துடன் இணைந்துள்ள உற்பத்திப்பொருட்கள் மற்றும் சேவைகள் உயர் தரத்திலானவை.

### 7 TECHNICALEXPERTISE

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் பதவியினர் அனைவரும் விரிவான தொழில்நுணுக்க அறிவினைப் பரப்புதல் வேண்டும்.

### 8 LEADERSHIP

பதவியினர் அனைவரும் சிறந்த தலைமைத்துவத் தகுதிகள் / மட்டங்களைக் கொண்டிருக்கின்றனர்.

**9 COMMUNICATION**

பதவியினர் அனைவரும் பயனுறுதிவாய்ந்த தொடர்பாடலை இடைவிடாது ஆற்றுகின்றனர்.

**10 HUMAN RESOURCE DEVELOPMENT**

தே.தொ.பா.சு.நி தனிப்பட்ட இயலுமையைச் செம்மைப்படுத்துவதற்கு மனிதவள அபிவிருத்தியை தொடர்ந்து மேம்படுத்துகின்றது.

## தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் சேவை விழுமியங்கள்

***தொடர்பு***

தே.தொ.பா.சு.நி இலங்கையில் பாதுகாப்பான ஆசாரமொன்றை உருவாக்கு வதற்குப் பொறுப்புவாய்ந்தது. எமது நிகழ்ச்சித்திட்டங்கள் வேலைத்தலங்களில் காணப்படுகின்ற இன்றைய மற்றும் எதிகாலத்தில் காணப்படுகின்ற பிரச்சினைகளுக்கு பதிலளிப்பவையாகும்.

***தரம்***

நாம், எமது சேவைகளை வழங்குவதற்கு சிறந்த விஞ்ஞானம்சார் செய்முறை களை, சிறந்த விஞ்ஞான அறிவினையும் வளங்களையும் மட்டுமே பயன்படுத்து கின்றோம். எமது சேவைகளை வழங்குவதற்கு அனுபவம்வாய்ந்த சிறந்த தகைமையுள்ள நிபுணர்களைப் பணிக்கமர்த்துவதன் மூலம் எமது சேவைகளின் சிறந்த தரத்தை நாம் பேணுகின்றோம். நாம், இலங்கையரின் எதிர்கால தொழிற்றுறையினை நோக்கி சிறந்த தரமான தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார சேவைகளை வழங்குகின்றோம்.

***பங்குடமை***

உள் நாட்டு தொழிற்றுறை, தொழில்தருநர்கள், பணியாளர்கள், சர்வதேச தொழில் தாபனங்கள், பல்கலைக்கழங்கள் மற்றும் உலக எண்ணக்கருத்துக்களுக்கமை வான தொழில்சார் சமூகத்துடன் பங்குடமையை ஏற்படுத்துவதில் தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சினைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ஒரேயொரு அரசாங்க நிறுவகம் நாமாவோம். மேலும், நாம் தொழில்தருநர்கள், பணியாளர்கள் மற்றும் அனைத்துப் பங்குதாரர்களுடனும் பணிபுரிவதுடன், **அனைத்து முத்தரப்பு ஆக்கக் கூறுகளுடன்** தொடர்பினைப் பேணுவதற்காக எம்மை அர்ப்

***அணுகுமுறை***

விரிவுபடுத்தப்பட்ட பாரம்பரிய மற்றும் இலத்திரனியல் அணுகுமுறையினூடாக தே.தொ.பா.சு. நிறுவனத்தின் அனைத்துச் சேவைகள் மற்றும் செயற்பாடுகள் பற்றிய தகவல்களை ஆர்வமுள்ள எந்தத் தரப்பும் பெற்றுக்கொள்ள முடியும்.எமது இணையத்தளம்: http//www.niosh@gov.lk

***செயலாற்றுகை***

எமது நிகழ்ச்சித்திட்டங்கள் அனைத்தும் பொறுபேறுகளை ஆற்றுப்படுத்தியவை ஆகும்.

***பொறுப்புக்கூறுதல்***

எமது நிகழ்ச்சித்திட்டங்கள் சர்வதேச, உள்நாட்டு தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நியமங்களுக்கேற்ப மதிப்பிடப்படுவதுடன், நாம் தொழிற்றுறையில்

இருக்கின்ற தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துடன் தொடர்புபட்ட எந்த பிரச்சினைக்கும் சிறந்த தீர்வினை வழங்குகின்றோம்.

***பாகுபாடற்ற சேவைகள்***


நாம் நியாயமானதும் பாகுபாடற்றதுமான சேவையை வழங்குகின்றோம்.

***நம்பகத் தன்மை***

எமது வாடிக்கையாளர்களின் தகவல்கள் பற்றிய இரகசியத்தன்மையைப் பேணுகின்றோம்.

**பல்லினத்தன்மை**

எமது பணியாளர்கள் வேலைத்தலத்தில் காணப்பட்ட முழுமையான பல்லின தோற்றப்பட்டினைப் பிரதிபலிப்பதுடன், எமது ஆராச்சிகள் மற்றும் தலையீடுகள் அமெரிக்க வேலைத் தலத்திற்குத் தேவைப்பட்ட பல்லினத் தீர்வுகளைப் பிரதிபலிக்கின்றன.




**தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் அபிவிருத்திப் பாதை**

## தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் நிருவாகக் கட்டமைப்பு

2009 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்கச் சட்டத்தின்படி, மூன்று தரப்புச் சபையை உள்ளடக்கிய பொதுச் சபைக் குழுவே தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் தீர்மானம் மேற்கொள்ளும் குழுவாகும். இப்பொதுச் சபைக் குழுவின் கட்டமைப்பானது 14 அமைச்சுகளின் பிரதிநிதிகளை உள்ளடக்கியதாக 2009 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்கச் சட்டத்தினால் குறித்துரைக்கப்பட்டுள்ளதோடு தொழில் மற்றும் தொழிற் சங்க உறவுகள் அமைச்சின் செயலாளரைத் தலைவராகவும் கொண்டுள்ளது. தற்போது பின்வருகின்ற உறுப்பினர்கள் அரசாங்க அமைச்சுக்கள், தொழில்தருநர்கள் மற்றும் பணியாளர்களின் தொழிற் சங்கங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர்.

### ஆளும் சபை உறுப்பினர்களின் வெட்டுமுகம்



**தலைவர்**

திரு.எஸ்.ஏ.என்.சரணதிஸ்ஸ

செயலாளர்

தொழில் மற்றும் தொழிற் சங்க உறவுகள் அமைச்சு

### சபை உறுப்பினர்கள்



**டாக்டர். சம்பிக அமரசிங்க**

பணிப்பாளர் அதிபதி

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம்

------------------------------

**திரு. ரோஹிதா பெர்னாண்டோ**
பிரதம தொழிற்சாலைகள் பொறியியலாளர்
தொழில் திணைக்களம்



இரசாயனச் செயன்முறைப் பொறியியற் பேராசிரியர்
மொரட்டுவப் பல்கலைக்கழகம்



**மருத்துவர் இனோகா சுரவீர**
சமூக மருத்துவ ஆலோசகர்
சுகாதார அமைச்சு



டாக்டர் டபிள்யூ.பி.விஜேரத்ன
உணவு மற்றும் விவசாய அமைச்சு



திரு.பீ.எம்.கே.ஹெட்டியாராய்ச்சி
பணிப்பாளர்
நிதி அமைச்சு

திரு.எச்.என்.பீ.ஹேட்டிகந்தக

திரு.டபிள்யு.டீ.பீ.பி.வன்னியாராய்ச்சி

திரு.டபிள்யு.டீ.எம்.ஜி.பி.திஸ்ஸநாயக


திரு.ஏ.டீ.வீ.குமார வீரசிங்க

திரு.எச்.ஐ.ரூபசிங்க

திரு.டீ.டீ.எஸ்.கே.திஸ்ஸநாயக

திரு.பீ.பி.மல்லவர

# நிறுவகத்தின் கட்டமைப்பு



## தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் குறிக்கோள்கள்

### பொதுவான குறிக்கோள்கள்

அ) தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றி மற்றும் தொழில்தருநர்களினதும் பணியாளர்களினதும் தொழில் மற்றும் பாதுகாப்பின் தன்மையைக் கவனத்திலெடுத்து இருவரும் வேலையாற்றுகின்ற சூழல் பற்றி தேசிய கொள்கையை வகுத்தமைப்பதில் அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குதல் ;

(ஆ) வேலைத் தலங்களில் தொழில் தொடர்பான விபத்துக்கள் மற்றும் ஊறுகளைத் தடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் பற்றி அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குதல் ;

(இ) தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத் துறையில் விசாரணைகள், ஆய்வு நிகழ்ச்சித்திட்டங்கள், அளவீடுகள் மற்றும் ஆராய்ச்சி போன்றவற்றை நடத்துதல், பெறுப்பேற்றல் மற்றும் அவற்றிற்கு உதவுதல் ;

(ஈ) உபகரணத்தை சரியாகப் பயன்படுத்துவது, தீங்கிளைக்கின்ற பொருட்கள், பௌதீக, இரசாயன அல்லது உயிரியல் முகவர்கள் அல்லது உற்பத்திப் பொருட்கள் அல்லது பிற வேறு தீங்குகள் பற்றி எந்த நிறுவனத்திற்கோ அல்லது ஆளுக்கோ ஆலோசனை சேவையை வழங்குதல் ;

(உ) தொழில்சார் உறவுகள் மற்றும் சுகாதாரத்தில் அத்துடன் தொடர்புபட்ட விடயங்களில் அறிவினை, பயிற்சியினைத் தேவைப்படுத்துகின்ற பணியாளர்கள், இருப்பாளர்கள், வேலையாளர்கள் அல்லது பிற வேறு நபர்களுக்கு அறிவூட்டுதல் மற்றும் தேவையான பயிற்சியை பிற வேறு நிறுவனங்களுடன் அல்லது இலங்கை அல்லது வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களுடன் இணைந்து அல்லது நிறுவகத்தினால் வழங்குதல் மற்றும் அத்தகைய கல்வி அல்லது பயிற்சியினைப் பூர்த்திசெய்வதன் பேரில் சான்றிதழ்கள் மற்றும் டிப்புளோமாக்களை வழங்குதல் ;

(ஊ) உபகரணத்தை சரியாகப் பயன்படுத்துவது, தீங்கிளைக்கின்ற பொருட்கள், பௌதீக, இரசாயன அல்லது உயிரியல் முகவர்கள் அல்லது உற்பத்திப் பொருட்கள் மற்றும் தீங்குகளாகத் தெரிந்த வற்றை தவிர்த்தல் பற்றிய தேவையான சேவைகளை வழங்குதல் ;

(எ) (i) தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான விடயங்களில் நியமங்கள், நியதிகள், செய்முறைகள் மற்றும் வழிகாட்டல்கள் தொடர்பான சட்டவாக்க தேவைப்பாடுகள் பற்றி அமைச்சருக்கு ஆலோசனை வழங்குதல் ;

(ii) வேலைச் செயன்முறை, பொருட்கள் மற்றும் முகவர்களை மதிப்பிடுதல் மற்றும் தீர்மானித்தல். மேற்பார்வைக்கமைவாக தடைசெய்யப்பட்டவை, மட்டுப்படுத்தப்பட்டவை அல்லது ஆக்கப்பட்ட வையை வெளிப்படுத்தல் ;

(ஏ) தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான தகவல்களை சேகரித்தல், தயாரித்தல், பரப்புதல் மற்றும் வெளியிடுதலை பொறுப்பேற்றல் அல்லது ஒருங்கிசைதல்;

(i) தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான மாநாடுகள், கருத்தரங்குகள், பயிற்சிப்பட்டறைகள் அல்லது ஏனைய ஒத்த நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்கமைத்தல் அல்லது அனுசரணையளித்தல் மற்றும் பத்திரிகைகளில் வெளியிடுதல் ;

(ஐ) தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துடன் தொடர்புபட்ட அமைச்சுக்களுக்கிடையிலான கருத்திட்டங்கள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயற்பாடுகளை ஒருங்கிணைத்தல் ;

(ஒ) தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார செய்முறையினை மேம்படுத்தும் நோக்கத்திற்காக நூலகங்கள் மற்றும் ஆய்வுகூடங்களைத் தாபித்தல் மற்றும் பராமரித்தல் ;

(ஓ) ஆராய்ச்சி மற்றும் விசேட ஆய்வுகூடங்களை விருத்தி செய்தல் ;

(ஔ) தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார துறையிலிருக்கின்ற தேசிய, சர்வதேச நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள் அல்லது பிற வேறு தாபனங்களுடன் இணைப்புகளை வலையமைப்பினைத் தாபித்தல் ;

(ஃ) தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத் துறையில் தேசிய நியமங்களைத் தாபித்தல்.

**<u>எமது குறிக்கோள்களை அடைவதில் தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் திறமுறைகள்</u>**

- தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரக் கொள்கையை விருத்தி செய்வதில் அரசாங்கத்திற்கு உதவுதல் மற்றும் உரிய நேரத்தில் நாளதுவரைப்படுத்தல்.

- இரசாயனத்தைக் கையாளுதல், நிருமாணப் பாதுகாப்பு, தொழில்சார் விபத்துக்கள் மற்றும் நோய்களைத் தடுத்தல், சுற்றாடல் பாதுகாப்பு, கழிவுப்பொருள் முகாமைத்துவம் மற்றும் மன அழுத்தத்தைக் கையாளுதல் போன்ற அத்தகைய நிகழ்ச்சித்திட்டங்களை மையப்படுத்து வதனூடாக விழிப்புணர்வினை உருவாக்குவதனூடாக தொழில்சார் ஊறுகள் மற்றும் நோய்களை குறைத்தல்.

- தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார இடர் மதிப்பீடுகளினால் தொழிலாற்றுகின்ற சூழலை செம்மைப்படுத்துவதற்காக இத்தொழிற்றுறைக்கு உதவியுள்ளதுடன், செம்மைப்படுத் தலுக்கான வழிகாட்டல்கள், தீர்வுகள் மற்றும் பரிந்துரைகள் வழங்கப்பட்டன.

- தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துடன் ஆராய்ச்சி மற்றும் ஆய்வுகளை நடத்துவதற்கு தே.தொ.பா.சு.நிறுவகத்தில் ஆராய்ச்சி, அபிவிருத்தி நிதியத்தை உருவாக்குதல் மற்றும் ஆராய்ச்சி அணிகளைப் பலப்படுத்துதல் அத்துடன் ஆராய்ச்சித் தாள்களைப் பிரசுரித்தமை மற்றும் உள்நாட்டு, வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுடன் / நிறுவனங்களுடன் தொடர்பினை ஏற்படுத்தியமை மற்றும் ஆராய்ச்சி செய்தமை.

- தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாத்தில் சிறந்த செய்முறைகளுக்கான பல்வேறு ஒழுங்குகளில் தொழிற்றுறைத் தலைவர்களை கௌரவிப்பதற்கும் இனங்காண்பதற்கும் தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார சிறப்பு விருதுகள் போட்டி அறிமுகப்படுத்தப்பட்டது.

- தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றி விழிப்புணர்வினை உருவாக்குவதற்கும் தொழில்சார் தன்மையைப் பலப்படுத்துவதற்கும் அதிக எண்ணிக்கையிலான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துதல்.

- தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நியமங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளை விருத்திசெய்தல்.

- தனிநபர் பாதுகாப்பு உபகரணத்தை மற்றும் ஏதேனும் பௌதீக இரசாயனம் மற்றும் உயிரியல் முகவர்கள் அல்லது உற்பத்திப் பொருட்கள் மற்றும் பிற வேறு தீங்கிளைக்கின்ற பொருட்களை சரியாகப் பயன்படுத்துவது தொடர்பில் விளக்க செய்முறையை நடத்தியமை.

- தொழிற்றுறைப் பிரதிநிதிகள் 450 இற்கும் மேற்பட்டோரின் பங்கேற்புடன் தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார மாநாட்டினை ஒழுங்கமைத்தல்.

- பணியாற்றுகின்ற சூழலை தீங்கற்ற சூழலுக்கு சீர்ப்படுத்துவதற்கான குறிக்கோளுடன் தொழிற்றுறை அதன் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிலையின் அடிப்படையில் கொண்டுவருவதற்கு தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார முறைமையை அறிமுகப்படுத்துதல்.

**2017.01.01 இலிருந்து 2017.12.31 வரை**
**தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தினால்**
**நடத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் பயிற்சிகள்**

| **எண்.** | **நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர்** | **ஆரம்பிக்கின்ற திகதி** |
|---|---|---|
| தரம் மூன்று | தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தில் தேசிய டிப்புளோமா | 2017.03.26 - தொகுதி இல. - 13<br>2017.07.02 – தொகுதி இல. - 14<br>2017.11.26 – தொகுதி இல. - 15 |
| தரம் இரண்டு | தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாத்தில் சான்றிதழ் | 2017.01.07 – தொகுதி இல. -20<br>2017.01.25 - தொகுதி இல. - 21<br>2017.02.03 – தொகுதி இல. -22<br>2017.07.05 – தொகுதி இல. -23<br>2017 .08.12 - தொகுதி இல. - 24 |
| தரம் இரண்டு | சுகாதார பாதுகாப்பு, கழிவுப்பொருள் முகாமைத்துவம் மற்றும் அனர்த்த தயார்ப்படுத்தல் - 10 நாள் நிகழ்ச்சித்திட்டம் | |
| தரம் ஒன்று | நிருமாணத்தில் பாதுகாப்பு - இரண்டு நாள் நிகழ்ச்சித்திட்டம் | 2017.01.11 மற்றும் 12 |
| தரம் ஒன்று | கழிவுப்பொருள் முகாமைத்துவம் - ஒரு நாள் நிகழ்ச்சித்திட்டம் | 2017.01 20 |
| தரம் ஒன்று | கொதிகலன் பாதுகாப்பு - ஒரு நாள் நிகழ்ச்சித்திட்டம் | 2017.02 09 |
| தரம் ஒன்று | தொழிற்றுறை தாதிகள் - ஒரு நாள் நிகழ்ச்சித்திட்டம் | 2017.02.28 |
| தரம் ஒன்று | ஆடைக் கைத்தொழில் மேற்பார்வையாளர்களுக்கான பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் | 2017. 03. 20 மற்றும் 21 |
| தரம் ஒன்று | தீங்கிளைக்கின்ற தொழிற்றுறைகளின் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் - ஒரு நாள் நிகழ்ச்சித்திட்டம் | 2017 04.28 |
| தரம் ஒன்று | மட்டுப்பாடான இடம் மற்றும் பாதுகாப்பும் சுகாதாரமும் - ஒருநாள் நிகழ்ச்சித்திட்டம் | 2017.05.16 |
| தரம் ஒன்று | மேற்பர்வையாளர்களுக்கான தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் | 2017 06.30 |


| | | |
|---|---|---|
| தரம் ஒன்று | தொழில்சார் முதலுதவி - ஒரு நாள் நிகழ்ச்சித்திட்டம் | 2017 07.02/03/04 |
| தரம் ஒன்று | நிருமாணத்தில் பாதுகாப்பு - மூன்று நாள் நிகழ்ச்சித்திட்டம் | 2017.07 05/06/07 |
| தரம் ஒன்று | இலத்தினரியலில் பாதுகாப்பு - இரண்டு நாள் நிகழ்ச்சித்திட்டம் | 2017.07.06.07 |
| தரம் ஒன்று | இரசாயனத்தில் பாதுகாப்பு - ஒரு நாள் நிகழ்ச்சித்திட்டம் | 2017.07.18 |
| தரம் ஒன்று | OSHA 18001 - ஒரு நாள் நிகழ்ச்சித்திட்டம் | 2017.08.19 |

**விசேட நிகழ்ச்சித்திட்டங்கள்**

| | | |
|---|---|---|
| தரம் இரண்டு பயிற்சி | இரத்தினபுரியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கான மருத்துவ முகாம் | 2017.06.31 |
| தரம் இரண்டு பயிற்சி | தொழிலினால் அங்கவீனமாகி பாதிக்கப்பட்டவர்களை இயங்கச் செய்தல் | 2017. 07.20 |
| தரம் இரண்டு பயிற்சி | யப்பான் குடிபெயர்ந்த வேலை யாட்களுக்கு தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் | 2017.06.05 |
| தரம் இரண்டு பயிற்சி | பயிற்சியளிக்கும் அலவலர்களுக் கான பயிற்சி – மட்டக்களப்பு | 2017.07/27/28/29/30/31 |
| தரம் இரண்டு பயிற்சி | பயிற்சியளிக்கும் அலவலர்களுக் கான பயிற்சி – வவுனியா | 2017.08/23/24/25/26/27 |
| தரம் இரண்டு பயிற்சி | பயிற்சியளிக்கும் அலவலர்களுக் கான பயிற்சி – மட்டக்களப்பு | 2017.08/10/11/12/13/14 |
| தரம் இரண்டு பயிற்சி | பயிற்சியளிக்கும் அலுவலர்களுக் கான பயிற்சி – வவுனியா | 2017.09/07/08/09/10/11 |
| தரம் இரண்டு பயிற்சி | | 2017.10.11 |
| தரம் இரண்டு பயிற்சி | தொழில் புரிவதற்கான உடற்றகுதி மருத்துவ முகாம் -அவிசாவெல்லை | 2017 .11.28 |
| தரம் இரண்டு பயிற்சி | தொழில் புரிவதற்கான உடற்றகுதி மருத்துவ முகாம் – கொக்கல்ல | 2017.12.06 |
| தரம் இரண்டு பயிற்சி | தொழில் புரிவதற்கான உடற்றகுதி மருத்துவ முகாம் – கட்டுநாயக | 2017.12.15 |

## 2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில் நடத்தப்பட்ட பயிற்சிப் பாடநெறிகள், பயிற்சிப்பட்டறைகள் மற்றும் கருத்தரங்குகள்

### தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் பயிற்சி முறை




தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம் தரப்பட்டுள்ள அட்டவணையின்படி அதன் பயிற்சிகளுக்குத் தற்போது வடிவங்கொடுத்துள்ளது. சாதாரணதர தரக் கல்வித் தகைமையின் பின்னர் எந்த மாணவரும் எமது சான்றிதழ் பயிற்சியில் இணைந்துகொள்ள முடியும் என்பதுடன், அவர்கள் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தில் தொழில்சார் தகைமையைப் பெற்றுக்கொள்ள முடியும்.

உயர் தரக் கல்வித் தகைமையுள்ள மாணவர்கள், எதிர்காலத்தில் தகைமையுள்ள பாதுகாப்பு அலுவலராக வருவதற்கு எமது பயிற்சியில் இணைந்துகொள்ள முடியும்.

**3 ஆவது மட்டப் பயிற்சி**


**தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தில் தேசிய டிப்புளோமா**

- தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத் தேசிய டிப்புளோமா பயிற்சியானது, தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துடன் தொடர்புபட்ட தொழிற்றுறையின் தேவை மற்றும் அவசியத்தினை மதிப்பிட்டதன் பின்னர் வகுத்தமைக்கப்பட்டுள்ளது. இதன்படி, தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார முகாமைத்துவ மாதிரி அலகுடன் மூன்று மாதிரி அலகுகள் உள்ளன. ஒவ்வொரு மாதிரி அலகின் இறுதியிலும் மாதிரி பரீட்சைகள் காணப்படுவதுடன், பரீட்சையின் பின்னர், பங்குபற்றியவர்கள்,அவர்கள் கற்றறிந்தவற்றினதும், அவர்களது தொழிற்றுறை அனுபவத்தினதும் அடிப்படையில் கருத்திட்ட அறிக்கையொன்றினைச் சமர்ப்பித்தல் வேண்டும். இந்தப் பயிற்சியானது, வகுப்பறை அமர்வுகள் மற்றும் துறைசார் பயிற்சிகளை உள்ளடக்கி வடிவமைக்கப்பட்டுள்ளது. இதன்படி,'லோட் ஸ்ரார் பிறைவெட் லிமிடெட்', 'சிலோன் டொட் யாட் பிறைவெட் லிமிடெட்', 'பிறண்டிக்ஸ் பிறைவெட் லிமிடெட்','யுனி லிவோஸ் பிறைவேட் லிமிடெட்' போன்றோர் எமது துறை பயிற்சி தரப்பினர் ஆவார்கள்.

- தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம், 2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மூன்று டிப்புளோமா நிகழ்ச்சித்திட்டங்களை நடத்தியிருந்தது.2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில் அதிகளவிலான தேவையினால் நாம் மூன்று நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துவதற்கு அட்டவணைப்படுத்தியிருந்தோம் என்பதுடன், 13, 14 மற்றும் 15 ஆம் தொகுதி பங்குபற்றுநர்களுக்கான தெரிவுக்குரிய நேர்முகப்பரீட்சை நடத்தியதன் பின்னர் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. நேர்முகப் பரீட்சைகள் பெப்ரவரி மற்றும் மார்ச் மாதத்தில் நடத்தப்பட்டிருந்ததுடன், ஒவ்வொரு தொகுதியிலும் 42, 47 மற்றும் 44 பாதுகாப்பு முகாமையாளர்கள் பங்குபற்றி மூன்று தொகுதிகள் பெப்ரவரி, மார்ச் மற்றும் செப்ரெம்பர் மாத காலப்பகுதியில் நடத்தப்பட்டிருந்தன.


- தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம், 2017 ஒக்டோபர் 12 ஆம் திகதி கிங்ஸ்பேறி ஹோட்டலில் "பட்டமளிப்பு விழாவினை" ஒழுங்கமைத்திருந்ததுடன், இந்நிகழ்வினை வெற்றிகரமாகவும் நிறைவேற்றியிருந்தது.

**சுற்றறிக்கையின்படியான பயிற்சியின் பாகம் பின்வருமாறு:**




இந்தப் பாடநெறியினைப் பூர்த்தி செய்த பல மாணவர்கள் தற்போது வெளிநாடுகளில் சேவையாற்று கின்றனர். மறுவகையில் வெளிநாட்டில் வேலைவாய்ப்பினை நாடுகின்றவர்களுக்கு மேலும் தகைமையைச் சேர்ப்பதனால் இது அதிகளவில் நன்மை பயக்கின்றது.

தே.தொ.பா.சு.நி. டிப்புளோமாவின் தரத்தைச் செம்மைப்படுத்துவதற்கு விரிவான கருத்திட்டமொன்றை மேற்கொள்வதுடன், இதன்படி, தே.தொ.பா.சு.நி டிப்புளோமாவின் பாகத்தை அடிப்படையாகக் கொண்ட பயிற்சி முறைமையை தரப்பட்ட எண்ணிக்கை காட்டுகின்றது. அதிகளவிலான கோரிக்கையினடிப்படையில், நாம், தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தில் உயர் தேசிய டிப்புளோமாவினை 2018/2019. ஆண்டு காலப்பகுதியில் ஆரம்பிக்கவுள்ளோம்.




## 2 ஆவது மட்டப் பயிற்சி

### தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தில் சான்றிதழ்

2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான ஐந்து கற்கை நெறிகள் வெற்றிகரமாக பூர்த்திசெய்யப்பட்டிருந்தன. ஒவ்வொரு கற்கைநெறியும் 15 வார கால அளவினைக் கொண்டது. அனைத்துத் தொகுதிகளிலும் குறிப்பாக 20,21,22,23,24 மற்றும் 25 ஆம் தொகுதிகளில் 140 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்குபற்றியிருந்தனர். பங்குபற்றியிருந்த அனைவரும் கற்கைநெறியை வெற்றிகரமாக நிறைவுசெய்திருந்தனர் என்பதுடன், இவர்களுக்கான சான்றிதழ் 2017 ஒக்டோபர் 12 ஆம் திகதி பட்டமளிப்பு விழாவில் வழங்கப்பட்டிருந்தது. எம்மிடம் பயிற்சி பெற்றவர்கள் அனைவரும் தொழிற்றுறையில் பாதுகாப்பு அலுவலர்களாகக் கடமையாற்றுகின்றார்கள். க.பொ.த. உயர்தர தகைமைகளுடன் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தில் ஆர்வமுள்ள எவரும் இக் கற்கை நெறியைத் தொடரலாம். ஐ.என்.சி.சி.ஐ. சீமெண்ட் பிறைவேட் லிமிடெட்டின் வேண்டுகோளின்பேரில் 2017 செப்ரெம்பர் மாத காலப்பகுதியில் 12 அங்கத்தவர்களின் பற்குபற்றலுடன் விசேட சான்றிதழ் கற்கை நெறியொன்று அரம்பிக்கப்பட்டிருந்தது.



- <u>வாராந்த சான்றிதழ் கற்கைநெறி (16 ஆவது அணி) 2017 சனவரி 13 ஆம் திகதி</u>




- <u>வார இறுதி கற்கைநெறி ( 19 ஆவது அணி) 2017 ஓகஸ்ட 20 ஆம் திகதி</u>

**சூழல்சார் பாதுகாப்பு, கழிவு முகாமைத்துவம் மற்றும் அனர்த்தத்தில் தயார்ப்படுத்தல்**

இது 2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில் தே.தொ.பா.சு நிறுவகத்தினால் மேற்கொள்ளப்பட்ட புதிய முயற்சியொன்றாகும். தே.தொ.பா.சு நிறுவகமானது, தரமான சுற்றுப்புறச்சூழல் முகாமைத்துவ முறைமை களைப் பராமரிப்பதற்கு சூழல் பாதுகாப்பு அலுவலர்களுக்கான 15 நாள் பயிற்சியினை ஒழுங்கமைப்பதன் மூலம் அவர்களுக்கு ஆதரவளிப்பதற்கு தொழிற்றுறையிலிருந்து பல வேண்டுகோள்களைப் பெற்றிருந்தது. இதன்படி, தே.தொ.பா.சு நிறுவகமானது, தொடர்புபட்ட விடயங்கள் உள்ளடங்கலாக கூறப்பட்ட பணியாளர்களின் வகைப்பாட்டிற்காக 15 நாள் பயிற்சியை ஆரம்பித்திருந்தது.



**முதலாவது மட்டப் பயிற்சி**

**நிருமாணத் துறைக்கான தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம்**

நிருமாணத் துறைக்கான தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார இரண்டு நாள் பயிற்சிப் பட்டறை 35 பணியாளர்களின் பங்குபற்றலுடன் நடைபெற்றது. தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தினால் இந்த வேலையாளர்களின் வகைப்பாட்டில் குறிப்பாக தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தின் மீது கவனஞ்செலுத்தி இவர்களது மேற்பார்வையிடல் இயலுமையை செம்மைப்படுத்தும் குறிக்கோளுடன் ஒழுங்கமைக்கப்பட்ட விசேட பயிற்சியாகும். தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றிய சிறந்த செய்முறைகள் மற்றும் ஊக்குவிப்புத் திறன்கள் கற்பிக்கப்பட்டிருந்தன. பயிற்சியானது தே.தொ.பா.சு.நிறுவகத்தின் கேட்கோர்கூடத்தில் 2017 சனவரி 11 மற்றும் 12 ஆம் திகதிகளில் நடைபெற்றிருந்தது.

**கழிவு முகாமைத்துவப் பயிற்சி**

இந்தப் பயிற்சியானது, இலங்கையில் கழிவகற்றும் முறைமை தொடர்புபட்ட சட்டவாக்கம் மற்றும் காணப்படுகின்ற செய்முறை பற்றி கற்பிப்பதற்கு பயிற்சியளிப்பதற்கு கைத் தொழிற்றுறையினால் விடுக்கப்பட்ட வேண்டுகோளின் அடிப்படையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதன்படி, கழிவு முகாமைத்துவ அதிகாரசபையிடமிருந்தும், சுற்றாடல் அதிகாரசபையிடமிருந்தும் பயிற்சி அமர்வுகளை நடத்துவதற்கு வள ஆளர்கள் அழைக்கப்பட்டிருந்தனர். தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகமே பிரதான பயிற்சி ஒழுங்கமைப்பாளர் என்பதுடன், தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றி விசேட விரிவுரைகளை வழங்கியுள்ளதுடன், பல்வேறு வகையான கழிவுப் பொருட்களைக் கையாள்கின்றபோது தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணத்தை சரியாகப் பயன்படுத்துவது பற்றி சில செய்முறை அமர்வுகளையும் நடத்தியிருந்தது.

**கொதிகலன் இயக்குநர்களுக்கான ஒரு நாள் பயிற்சி**

கொதிகலன் இயக்குநர்களுக்கான பயிற்சியானது பல கைத்தொழிற்றுறையாளர்களால் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்ததுடன், 2017.02.09 ஆம் திகதியில் நடைபெற்ற ஆரம்ப நிகழ்ச்சித்திட்டத்தில் 16 பேர் பங்குபற்றியிருந்தனர்.

- **கைத்தொழிற்றுறை தாதியர்களுக்கான தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம்**

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகமானது, தோட்டத்துறையில், புடைவை உற்பத்தியில் மற்றும் ஹொட்டல் துறையில் தொழிற்றுறை தாதியர்களுக்காக பயிற்சியொன்றினை 18 தொழிற்றுறைத் தாதியர்களின் பங்கேற்புடன் 2017 பெப்ரவரி 28 ஆத் திகதி ஆரம்பித்திருந்தது. இந்த ஒரு நாள் பயிற்சியானது, தீங்கினை இனங்காணுதல், இடரினை மதிப்பிடும் திறன் பற்றி கலந்துரையாடும் ஆற்றல், விபத்தினை அறிவிக்கும் முறைமை மற்றும் தரவினைக் கையாளுதல் போன்றவற்றில் பரந்த அறிவினை வழங்குவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. இது, குறிப்பாக, தரவு மற்றும் தகவலின் அடிப்படையில் தீர்மானமெடுப்பதற்கு தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றி கற்பிப்பதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.

**ஆடைத் துறையினர்களுக்கான தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம்**

இந்தப் பயிற்சியானது, ஆடைத் துறை மேற்பார்வையாளர் தரத்திலான பணியாளர்களுக்கான ஒரு நாள் நிகழ்ச்சித்திட்டமாக 2017 பெப்ரவரி 28 திகதி நடத்தப்பட்டதுடன், இதில் 25 போ பங்குபற்றியிருந்தனர்.

**தொழில்சார் பாதுகாப்பு மற்றும் உயரத்தில் தொழில் புரிதல்**

இந்த நிகழ்ச்சித்திட்டம், நிருமாண தளத்தில் உயரத்தில் வேலையாற்றுகின்ற பணியாளர்களுக்கு பயிற்சியளிப்பதற்கு பண்டாரநாயக ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் 2017 ஏப்பிரல் 28 ஆம் திகதி ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது. செய்முறை அமர்வாக இருந்தமையால், எண்பத்தியெட்டு பணியாளர்கள் தமது அனுபவத்தைப் பகிர்ந்திருந்தனர்.


**ஒரு நாள் மட்டுப்படுத்தப்பட்ட இடம் தொடர்பான பாதுகாப்புப் பயிற்சி**

இது ஒரு விசேட நிகழ்ச்சித்திட்டமாக தொழிற்றுறையின் விசேட வேண்டுகோளினால் 2017 மே 16 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், 10 பணியாளர்கள் இந்த நிகழ்ச்சித்திட்டத்தில் பங்குபற்றியிருந்தனர்.

**மேற்பார்வையாளர்களுக்கான மற்றும் தர மதிப்பீட்டு உதவியாளர்களுக்கான தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம்**

ஏதேனும் தொழிற்றுறையில் சிறந்த தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார செய்முறை செயலாற்றுகை பற்றி மேற்பார்வையாளர்கள் மற்றும் அடித்தளப் பணியாளர்களுக்கு பயிற்றுவிக்கும் குறிக்கோளுடன் மேற் பார்வையாளர்கள் மீது விசேட கவனஞ்செலுத்தி மூன்று நாட்களுக்குள் பூர்த்தி செய்யும் வகையில் இந்த விசேட பாடநெறி வடிவமைக்கப்பட்டுள்ளது. இவர்களுக்கு இடர் மதிப்பீடுகள் பற்றிய அனுபவம் பகிரப் பட்டிருந்ததுடன், தனிநபர் பாதுகாப்பு உபகரணங்களை சரியாகப் பயன்படுத்துவது தொடர்பிலும் பயிற்று விக்கப்பட்டிருந்தது.





**தொழில்சார் முதலுதவிப் பயிற்சி**

இந்தப் பயிற்சி 2017 யூலை மாதம் 02,03 மற்றும் 04 ஆம் திகதிகளில் வெவ்வேறு தொழிற்றுறைகளின் வேண்டுகோளின்பேரில் செய்முறைப் பயிற்சியாக நடத்தப்பட்டதுடன், இதில் 09 பேர் பங்குபற்றியிருந்தனர்.

**மூன்று நாள் நிருமாணப் பயிற்சி**

இந்தப் பயிற்சி விசேடமாக நிருமாணத் தொழிற்றறையில் மேற்பார்வையாளர்களுக்காக 2017 யூலை மாதம் 05, 06 மற்றும் 07 ஆம் திகதிகளில நடத்தப்பட்டதுடன், இதில் 09 பேர் பங்குபற்றியிருந்தனர்.

**மின்சாரப் பாதுகாப்புப் பற்றிய இரண்டு நாள் பயிற்சி**

இது பாதுகாப்பான மின்சார வேலை பற்றி மின்னியலாளர்களின் திறன்களைச் செம்மைப்படுத்துவதற்காக 2017 யூலை மாதம் 06 ஆம் மற்றும் 07 ஆம் திகதிகளில் தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தில் இரண்டு நாள் பயிற்சிப் பட்டறையாக நடத்தப்பட்டிருந்தது. பல்வேறுபட்ட கம்பனிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தி 22 மின்னியலாளர்கள் பங்குபற்றியிருந்தனர்.




**இரசாயனப் பாதுகாப்பு - ஒரு நாள் பயிற்சி**

இந்தப் பயிற்சி 2017 யூலை 18 ஆம் திகதி நடத்தப்பட்டதுடன், இதில் 13 பேர் பங்குபற்றியிருந்தனர்.

**OSHA 18001 பயிற்சி**

இந்தப் பயிற்சி பல தொழிற்றுறைகளின் வேண்டுகோளின்பேரில் விசேட பயிற்சியாக யூலை 18 ஆம் திகதி 14 பேரின் பங்குபற்றுதலுடன் நடத்தப்பட்டது.

## தேசிய கருத்தரங்குகள் மற்றும் விழிப்புணர்வுப் பிரச்சாரங்கள்

**பாதுகாப்பு வாரம் - தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார ஊக்குவிப்புப் பிரச்சாரம்**

இது, 2009 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்கச் சட்டத்தின்படி தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்திற்குப் பணிக்கப்பட்ட மிகவும் விசேடமான தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார பிரச்சாரம் ஆகும். இதன்படி, தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம், தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார வாரத்தில் தொழில் உலகத்திற்கிடையில் மற்றும் பொது மக்களுக்கிடையில் பாதுகாப்பினையும், சுகாதாரத்தையும் மேம்படுத்தும் நோக்கில் பல்வேறு செயற்பாடுகளை ஒழுங்கமைத்துள்ளது.

**பாடசாலை பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டத்தை ஆரம்பித்தல்**

இது, பாடசாலைகளில் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தை ஊக்குவிக்கும் குறிக்கோளுடன் 2017 ஒக்டோபர் 9 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட புதிய முயற்சியொன்றாகும். இது, பாதுக்கையில் ஸ்ரீ பிரியந்த மகா வித்தியாலயத்தில் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இந்த நிகழ்ச்சித்திட்டம், தே.தொ.பா.சு. நிறுவகத்தினால் பாடசாலை வளாகத்தில் நெருப்புப் பாதுகாப்பு பற்றி விளக்கமளிக்க முடிந்தமை மிகவும் வெற்றிகரமான நிகழ்ச்சித்திட்டமாக இருந்தது. மாணவர்களும், ஆசிரியர்களும் இது போன்றதொரு அனுபவத்தை வெளித் தரப்பிடமிருந்து பெற்றிருக்கவில்லையாகையால் மிகவும் ஆர்வமாக இருந்தனர்.





**தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார மாநாடு**

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம், தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார வாரத்தை வருடாந்தம் ஒக்டோபர் 2 ஆவது வாரத்தை அமைச்சரவை பிரகடனப்படுத்தியவாறு ''தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார வாரமாக'' ஒழுங்கமைக்கின்றது. இந்த வாரத்தைக் கொண்டாடுவதற்காக, தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம், எமது அனைத்து அக்கறைதாரர்களுடனும் இணைந்து ஒரு தொடர் செயற்பாடுகளை ஒழுங்கமைக்கின்றது.

ஒக்டோபர் 2 ஆவது வாரம் ''தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார வாரமாக'' கருதப்படுவதுடன், தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சு, தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம் மற்றும் தொழிற்றுறை அக்கறைதாரரர்கள் இந்த வாரத்தைக் கொண்டாடுகின்றனர். இந்த வாரத்தின் குறிக்கோள், நாட்டில் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார ஆசாரத்தை மேம்படுத்துவதாகும்.

**தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார வாரத்திற்காகத் தயாரிக்கப்பட்டவாறான செயற்பாடுகள்**


***கருப்பொருள் - தொழில்சார் ஊறுகள் மற்றும் நோய்களைத் தடுத்தல் மற்றும் பாதுகாப்பாக வீடு திரும்புதல்.***

***ஊக்குவிப்பிற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ள இலத்தினரியல் துண்டுப்பிரசுரம்***



Ministry of Labour and Trade Union Relations
NIOSH
National Occupational Safety & Health Conference – 2017
"Prevent all occupational injuries. Go home safe and healthy."
11th October 2017 | Kingsbury Hotel - Main Ballroom | 9 am Onwards
The second week of October is designated as the "National Occupational Safety & Health Week" by the cabinet of ministers in the year 2009. The National Institute of Occupational Safety & Health, Ministry of Labour is commemorating this week with the participation of our tripartite constituents with the objective of developing a safety culture in all workplaces island wide annually. Further we emphasis on minimizing occupational diseases and accidents in all workplaces and reduce the absenteeism as a direct measure in improving productivity. Furthermore, the theme of the week is aligned with the concept of "Prevent all occupational injuries. Go home safe and healthy." where it highlights the importance of Occupational Safety & Health, Occupational injury prevention, Minimize absenteeism, and OSH based innovation and to invest on economic development drive.
PREVENT
All Occupational Injuries.
GO HOME
Safe and Healthy.
National Occupational Safety & Health Conference - 2017
11th October, Sri Lanka
NATIONAL OCCUPATIONAL SAFETY & HEALTH CONFERENCE
• NIOSH request Sponsorships:
Platinum - LKR 800,000/-
Gold - LKR 500,000/-
Silver - LKR 300,000/-
Co-Sponsors - LKR 100,000/-
• Program Book
Specifications of the Souvenir are as follows;
Size - B5
Colour - 04 Colour
Investment
Full Page LKR 18,000/-
Half Page LKR 10,000/-
Back Page LKR 50,000/-
Front Inner Page LKR 50,000/-
Advertising on Agenda Page LKR 20,000/-
Articles / Case Studies (Per Page) LKR 20,000/-
The soft copy of the article/ graphic designs with a high resolution soft ware should be delivered to the institute on or before 7th of September 2017. The Program Book will be distributed on the National OSH Conference Day.
• Banners Display
Specifications of the Banners are as follows;
The banners should be received by the institute by 9th of October 2017. Late banners will not be displayed during the Conference Day.
Investment: LKR 5,000/-
• Digital Display
Digital display of the company profile will be accepted with a safety message and displayed only on the Conference. (on Main Screens)
Investment: LKR 5,000/-
(For 15-20 Seconds)
Special Registration Offers:
NIOSH Corporate Members – Buy 10 get 2 free
Non-members – Buy 10 get 1 free
Tickets are available now
LKR 5,000/-
Buy 10 tickets & get 1 free
For more information and reservations:
Director General,
National Institute of Occupational Safety & Health,
97, Jawatta Road, Colombo – 05.
Tel: 011 2 585 425 • 011 2 598 672
• E-mail: info@niosh.gov.lk
• Official website: www.niosh.gov.lk
Dr. N. C. Amarasinghe – 0774457566
Ramya Jamburegoda – 0777457758
Mohan Perera – 0773956382


*பற்றுச்சீட்டு*




**தேசிய பாதுகாப்பு வாரத்தை ஆரம்பிப்பதற்கு முன்னரான பத்திரிகை மாநாடு**

கௌரவ அமைச்சர்களால் பாதுகாப்பு வாரச் செய்தியை வெளியிடுவதற்காக பத்திரிகையாளர் மாநாடொன்று ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது.


கௌரவ தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சர் திரு.டபிள்யு.டீ.ஜே.செனவிரத்ன அவர்கள் நாட்டின் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தைத் தரமுயர்த்துவதற்கான தனது ஈடுபாட்டினை பிரகடனப்படுத்தியிருந்ததுடன், அமைச்சுக்களின் ஈடுபாட்டினையும் உறுதிப்படுத்தியிருந்தார்.



**தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார மாநாடு – 2017**

இந்நிகழ்வானது தொழிற்றுறையிலுள்ள பாதுகாப்பு முகாமையாளர்கள் மற்றும் உயர் முகாமைத்து வத்திற்கு உரையாற்றும் நோக்கில் தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தினால் ஒழுங்கமைக்கப்பட்ட எமது வருடாந்த நிகழ்வுகளில் ஒன்றாகும். இதில் பங்குபற்றுகின்றவர்களின் எண்ணிக்கை வருடாந்தம் அதிகரிப்பதனை தே.தொ.பா.சு.நிறுவகம் காண முடிகின்றமை மனமகிழ்வினை அளிக்கின்றது. இது, பாதுகாப்பான ஆசாரத்தை நோக்கிச் செல்வதில் தொழிற்றுறையின் ஈடுபாட்டினைக் காட்டியுள்ளது.

2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில் வருடாந்த மாநாடு நாட்டிற்கு மிகவும் விசேடமானதக இரந்தது. ஏனெனில் சிங்கப்பூரிலிருந்து திரு.தீபக் கஷ்யாப் அவர்கள் ‘‘தொழில்சார் காயங்களைத் தடுப்பதில் சிங்கப்பூரின் அனுபவம்’’ என்ற தலைப்பில் விசேட அதிதியாக விரிவுரை ஆற்றியிருந்தார். தே.தொ.பா.சு. நிறுவகம் எப்போதும், தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரப் பிரச்சினைகளைத் தடுப்பதில் புதிய திறமுறைகளைத் தெரிவிப்பதற்கு முயற்சிக்கின்றது. உலகளாவிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரப் பிரச்சினைகள் மீதான புதிய எண்ணக்கருக்கள் மற்றும் கருத்துக்களைத் தெரிவிக்கும் நோக்கில் தே.தொ.பா.சு.நிறுவகம், எமது தொழிற்றுறை சமூகத்தினரிடையே தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார அறிவினைப் பகிர்ந்துகொள்வதற்கு இலங்கை பேச்சாளர்களின் அனுசரணையில் சிங்கப்பூரிலிருந்து சிறந்த பேச்சாளர்களைக் கொண்டுவர முடிந்திருந்தது.








**தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் வருடாந்தப் பட்டமளிப்பு விழா**

எமது டிப்புளோமா கற்கைநெறியினை நிறைவுசெய்தவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு, தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் மற்றுமோர் வருடாந்த நிகழ்வாகக் காணப்படுகிறது. 150 இற்கும் மேற்பட்ட டிப்புளோமா மற்றும் சான்றிதழ் கற்கைநெறிகளை நிறைவு செய்தவர்கள் கலந்துகொண்ட இந்த நிகழ்ச்சி மிகவும் வண்ணமயமாக ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது. இந்நிகழ்வு கிங்ஸ் பேறி ஹொட்டலில் 2017 ஒக்டோபர் 11 ஆம் திகதி தொழில், தொழிற்சங்க உறவுகள் இராஜாங்க அமைச்சர் கௌரவ ரவீந்திர சமரவீர அவர்களினதும் மற்றும் பல சிறப்பு விருந்தினர்கள் தலைமையில் நடைபெற்றிருந்ததுடன், அதனைத் தொடர்ந்து எமது அனுசரணையாளர்களால் இரவுப் போசனத்துடன் இனிதே நிறைவுற்ற நிகழ்வொன்றாகும்.



தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் பதாதை ஒட்டும் பிரச்சாரம்











**தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார முகாமைத்துவ முறைமை தொழிற்றுறைக்கு ஆலோசனைச் சேவை**

பாதுகாப்பு மற்றும் சுகாதார முறைமையொன்று விருத்திசெய்யப்பட்டுள்ளதுடன், ஆபத்துப் பற்றிய மதிப்பீட்டினைச் செய்ததன் பின்னர் கூறப்பட்ட தொழிற்றுறையில் பாதுகாப்பு முறைமையொன்றினைத் தாபிக்குமாறு தேவைப்படுத்தப்பட்ட கம்பனிகளிடையே வெளியிடப்பட்டது.

**உபகரணங்களைச் சரியாகப் பயன்படுத்துவது பற்றித் தேவைப்படுத்தப்பட்ட சேவைகளுக்கான ஏற்பாடு**

| **வலயத்தின் பெயர்** | **சேவை வழங்கப்பட்ட திகதி** | **வழங்கப்பட்ட சேவைகள்** |
|---|---|---|
| அவிசாவெல்ல வலயம் | | தொழில்புரிவதற்கான உடற்றகுதி – மருத்துவர்களினால் உடல் பரிசோதனை<br>தொற்றாத நோய்கள் பற்றிய பரிசோதனை – 2 மருத்துவர்கள் மற்றும் 06 தாதிகளின் அணி – பின்னர் தொடர்கின்ற செயற்பாட்டுப் பத்தகம் வழங்கப்பட்டதுடன், மருத்துவமனைகள் பற்றிய அறிவிப்புகளும் மேற்கொள்ளப்பட்டன.<br>கண் பார்வை பற்றிய பரிசோதனை – தேவைப்பட்டிருந்தால் நிபுணரின் கவனிப்பிற்காக மருத்துவமனைகளுக்கு அனுப்பட்டமை<br>நுரையிரல் தொழிற்பாடு பற்றிய பரிசோதனை<br>கேட்கும் ஆற்றல் பற்றிய பரிசோதனை<br>தோல் பற்றிய பரிசோதனை மற்றும் நோய்களைக் கண்டறிதல்<br>Hb,FBS, SGOT, SGPT போன்றவற்றுக்கான இரத்தப் பரிசோதனை<br>BMIகணிப்பு மற்றும் ஆலோசகர்கள்<br>பல் கவனிப்பு மற்றும் பல் அடைத்தல் |
| கொக்கல்ல வலயம் | | தொழில்புரிவதற்கான உடற்றகுதி – மருத்துவர்களினால் உடல் பரிசோதனை<br>தொற்றாத நோய்கள் பற்றிய பரிசோதனை – 2 மருத்துவர்கள் மற்றும் 06 தாதிகளின் அணி – பின்னர் தொடர்கின்ற செயற்பாட்டுப் பத்தகம் வழங்கப்பட்டதுடன், மருத்துவமனைகள் பற்றிய அறிவிப்புகளும் மேற்கொள்ளப்பட்டன.<br>கண் பார்வை பற்றிய பரிசோதனை – தேவைப்பட்டிருந்தால் நிபுணரின் கவனிப்பிற்காக மருத்துவமனைகளுக்கு அனுப்பட்டமை<br>நுரையிரல் தொழிற்பாடு பற்றிய பரிசோதனை<br>கேட்கும் ஆற்றல் பற்றிய பரிசோதனை<br>தோல் பற்றிய பரிசோதனை மற்றும் நோய்களைக் கண்டறிதல்<br>Hb,FBS, SGOT, SGPT போன்றவற்றுக்கான இரத்தப் பரிசோதனை<br>BMIகணிப்பு மற்றும் ஆலோசகர்கள்<br>பல் கவனிப்பு மற்றும் பல் அடைத்தல் |
| கட்டுநாயக வலயம் | | தொழில்புரிவதற்கான உடற்றகுதி – மருத்துவர்களினால் உடல் பரிசோதனை<br>தொற்றாத நோய்கள் பற்றிய பரிசோதனை – 2 மருத்துவர்கள் மற்றும் 06 தாதிகளின் அணி – பின்னர் தொடர்கின்ற செயற்பாட்டுப் பத்தகம் வழங்கப்பட்டதுடன், மருத்துவமனைகள் பற்றிய அறிவிப்புகளும் மேற்கொள்ளப்பட்டன.<br>கண் பார்வை பற்றிய பரிசோதனை – தேவைப்பட்டிருந்தால் நிபுணரின் கவனிப்பிற்காக மருத்துவமனைகளுக்கு அனுப்பட்டமை<br>நுரையிரல் தொழிற்பாடு பற்றிய பரிசோதனை |

| | | |
|---|---|---|
| | | கேட்கும் ஆற்றல் பற்றிய பரிசோதனை<br>தோல் பற்றிய பரிசோதனை மற்றும் நோய்களைக் கண்டறிதல்<br>Hb,FBS, SGOT, SGPT போன்றவற்றுக்கான இரத்தப் பரிசோதனை<br>BMIகணிப்பு மற்றும் ஆலோசகர்கள்<br>பல் கவனிப்பு மற்றும் பல் அடைத்தல் |
| மிறிசாவெல்ல வலயம் | | ஆண்டிறுதி மற்றும் விடுமுறை காரணமாக வலயம் சேவையினைப் பெற்றுக்கொள்வதற்குத் தயாராக இருக்கவில்லை. |
| குண்டசாலை வலயம் | | ஆண்டிறுதி மற்றும் விடுமுறை காரணமாக வலயம் சேவையினைப் பெற்றுக்கொள்வதற்குத் தயாராக இருக்கவில்லை. |

தொழில் வகைப்பாட்டின்படி தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணத்தைச் சரியாகப் பயன்படுத்துவதற்கான விளக்கத்திற்குத் தேவையான போலி உபகரணங்கள் உருவாக்கப்பட்டுள்ளதுடன், இந்த தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணத்தைச் சரியாக பயன்படுத்துவது தொடர்பில் பணியாளர்களுக்கு விழிப்புணர்வூட்டும் அமர்வொன்றும் நடத்தப்பட்டது.



**தொழில் புரிவதற்கான உடற்றகுதி - இலவச மருத்துவ பரிசோதனை முகாம்**

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவனமானது, 2017 ஆண்டு நிறைவுறுவதற்கு முன்னர் அவிசாவெல்ல, கொக்கல்ல, கட்டுநாயக, மிறிசாவெல்ல மற்றும் குண்டசாலை வலையங்களிலிருக்கின்ற பணியாளர்களுக்காக மருத்துவ முகாம்களை நடத்துவதற்கு 2017.11.10 ஆம் திகதி சிரம வாசனா நிதியத்திடமிருந்து வேண்டுகோளொன்றினைப் பெற்றிருந்தது. 2017.11.22 ஆம் திகதியிடப்பட்ட கடிதம் சிரம வாசனா நிதியத்தின் பொது முகாமையாளரினால் ஒப்பமிடப்பட்டிருந்ததுடன், அந்தச் சபையின் அனுமதி பெறப்பட்டுள்ளதாகவும் பொது முகாமையாளரினால் அதில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த வேண்டுகோளினடிப்பபடையில் தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் பணிப்பாளர் அதிபதியாகிய நான் டாக்டர் சம்பிக றணவக 2017 நவம்பர் 24 ஆம் திகதியிடப்பட்ட சபைப் பத்திரிகையொன்றினை முன்மொழிந்து அச்சபையின் அனுமதியினைப் பெற்றிருந்ததுடன், தே.தொ.பா.சு. நிறுவகத்தின் சபை சேவையை வழங்குவதற்கு அனுமதியளித்திருந்தது.

**தே.தெ.பா.சு.நிறுவகத்தின் சேவை வழங்கல் முதலீட்டுச் சபையின் அனைத்து மூன்று வலயங்களிலும் இடம்பெற்றிருந்ததுடன், பின்வருகின்ற வலயங்களிலிருக்கின்ற பணியாளர்களுக்கு பின்வருகின்ற சேவைகள் வழங்கப்பட்டிருந்தன :**

**சேவை ஏற்பாட்டில் விசேட அவதானங்கள்**

1. இந்த சேவை ஏற்பாடு, சிரம வாசனா நிதியத்தின் சபையினால் அனுமதிக்கப்பட்டதாக சிரம வாசனா நிதியத்தின் பொது முகாமையாளரால் எழுத்திலான வேண்டுகோளினடிப்படையில் தே.தொ.பா.சு. நிறுவகத்தினால் மேற்கொள்ளப்பட்டது.

2. சேவைகளை வழங்குவதற்கு தே.தொ.பா.சு.நிறுவகத்தின் சபையினால் அனுமதியளிக்கப்பட்டது.

3. தே.தொ.பா.சு.நிறுவகம், பணியாளர்களுக்கும், தொழிற்றுறையினருக்கும் சேவையை வழங்கு வதற்கு விரும்பியமையால், தே.தொ.பா.சு.நிறுவகம், பல் கவனிப்பு, தொற்றாத நோய்களைப் பரிசோதித்தல், தோல் பரிசோதனை, BMI மற்றும் ஆலோசனைகள் போன்ற அத்தகைய சேவைகளையும் சேர்த்திருந்தது.

4. மதிய இடைவேளை மற்றும் தேநீர் இடைவேளையின்போது தொழிற்றுறை எதிர்பார்க்காதளவிற்கு ஆட்களை விடுவித்தமையால் தே.தொ.பா.சு.நிறுவகத்தினால் பதிவுகளை மேற்கொள்ள முடியவில்லை. சிரம வாசனா நிதியத்தின் முகாமைத்துவமும் அணியினருமே இதற்கு சாட்சியாவர். அமைச்சின் நல்லெண்ணத்தை பேணுவதற்கு நாம் முயற்சியெடுத்திருந்தோம்.

5. தே.தொ.பா.சு.நிறுவகம், சனக்கூட்டத்தைக் கையாளுவதற்கான உபாயமாக மருத்துவருடன் பதிவுசெய்யாது கேட்கும் ஆற்றல் மற்றும் நுரையீரல் தொழிற்பாட்டுப் பரிசோதனைகளுக்கு சில பணியாளர்களை அனுப்பியிருந்தது.

6. இது தே.தொ.பா.சு.நிறுவகத்தின் திட்டமல்ல, சிரம வாசனா நிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர்களின் வேண்டுகோளின்பேரில் இடம்பெற்றிருந்தது.

7. இரண்டு அல்லது மூன்று வாரங்களுக்குள் இத்தகைய வேலையை ஆற்றுவது தே.தொ.பா.சு. நிறுவகத்திற்கு கடினமான ( முதலீட்டுச் சபையுடன், பல் கவனிப்பு நிபுணர்களுடன், தொற்றாத நோய்கள் அலகுடன் மற்றும் போஷாக்கு அலகு போன்றவற்றுடன் ஒருங்கிணைதல்) பணியாக இருந்தது.

8. தே.தொ.பா.சு. நிறுவகம், ஒழுங்கமைப்பதற்கும், ஒருங்கிணைப்பதற்கும், வரவுசெலவுத்திட்டத்தில் உள்ளடக்காத செலவான தொழிற்றுறையுடனும், முதலீட்டுச் சபையுடனும் ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கும் முகாமிற்கு முன்னராக மூன்று வலயங்களுக்கும் விஜயம் செய்திருந்தது.

9. போக்குவரத்து, உணவு போன்றவை உள்ளடங்கலாக இணங்கப்பட்ட வரவுசெலவுத்திட்டத்தின்படி தளபாடங்களுக்கான செலவு உள்ளடக்கப்பட்டிருக்கவில்லையாகையால் தே.தொ.பா.சு. நிறுவகம் அனைத்து தளபாடங்களுக்குமான செலவினை உற வேண்டியிருந்தது.

தொழிலாற்றுவதற்கான உடற்றகுதி பற்றிய மதிப்பீட்டின் பெறுபேறு பின்வருமாறு:

தே.தொ.பா.சு. நிறுவகம், அவிசாவளை எற்றுமதி ஊக்குவிப்பு வலயக் கேட்போர் கூடத்தில் 2017 நவம்பர் 20 ஆம் திகதி நடத்தியிருந்தது.

தே.தொ.பா.சு. நிறுவகத்தின் அணி , 2017 நவம்பர் 16 ஆம் திகதி அவிசாவளை எற்றுமதி ஊக்குவிப்பு வலயத்திற்கு விஜயம் செய்து, வலயப் பணிப்பாளருடனும் 31 மனித வள முகாமையாளர்களுடனும் கலந்துரையாடியிருந்தது. அவர்களது வேண்டுகோள் மற்றும் கிடைக்கப்பெறுகின்ற திகதியின்படி, தே.தொ.பா.சு. நிறுவகம் நவம்பர் 26 ஆம் திகதி முகாமினை நடத்துவதற்குத் தீர்மானித்திருந்த போதிலும், சிரம வாசனா நிதியத்தின் பொது முகாமையாளர் வரமுடியாத காரணத்தினால் நவம்பர் 30 ஆம் திகதிக்கு மீளஅட்டவணைப்படுத்த வேண்டியிருந்தது. அமைச்சில் செயலமர்வொன்று காரணமாக தே.தொ.பா.சு. நிறுவகம் மீண்டும் இதனை மீள அட்டவணைப்படுத்தவேண்டியிருந்தது. இறுதியாக, தே.தொ.பா.சு. நிறுவகம், 2017 நவம்பர் 24 ஆம் திகதி நிகழ்ச்சித்திட்டத்தை அட்டவணைப்படுத்துவதற்குத் தீர்மானித்திருந்தது. தே.தொ.பா.சு. நிறுவகம் வெவ்வேறு சோதனைகளைச் செய்யவுள்ளவர்களின்

பட்டியலைப் பெற்றிருந்ததுடன், இதன்படி, வேலை நேர இழப்பினைக் குறைக்கும் நோக்கில் கிளினிக்கில் பங்குபற்றவுள்ளவர்களுக்கு நேரச் சீட்டுக்களை தே.தொ.பா.சு. நிறுவகம் வழங்கியிருந்தது.

அட்டவணையின்படி, தே.தொ.பா.சு. நிறுவகத்தின் அணி வளாகத்திற்கு காலை 7.30 மணிக்கு விஜயம் செய்திருந்ததுடன், காலை 8.30 மணிக்கு கிளினிக்கை ஆரம்பித்திருந்தது.








**பின்வருகின்ற கம்பனிகள் கிளினிக்கில் பங்குபற்றியிருந்தன.**

| **கம்பனியின் பெயர்** | **பங்குபற்றியவர்களின் எண்ணிக்கை** |
|---|---|
| ரீஜேய் லங்கா பிறின்ரேர்ஸ் பிறைவேட் லிமிடெட் | 16 |
| ரீஜேய் லங்கா பீ.எல்.சி | 80 |
| மிடாஸ் பிறைம் பொலிம டிவிஷன் | 100 |
| வை.கே.கே.லங்கா (பிறைவேட்) லிமிடெட் | 80 |
| ஜே.ஜே. சைல்ட் வியர் லங்கா (பிறைவேட்) லிமிடெட் | 20 |
| லங்கா இறப்பர் (பிறைவேட்) லிமிடெட் | 57 |
| மாஸ் கிறீடா | 75 |

| | |
|---|---|
| கைலாஷ் மேராசேம் (பிறைவேட்) லிமிடெட் | 48 |
| சி.பி.எல்.எக்ஸ்போர்ட்ஸ் (பிறைவேட்) லிமிடெட் | 160 |
| பிறண்டிக்ஸ் அவிசாவெல்லை | 20. |
| அவிசாவலை தேயிலைத் தொழிற்சாலை | 68 |
| கொண்கோர்ட் அப்பிரல் (பிறைவேட்) லிமிடெட் | 47 |
| மாஸ் அக்ரீவ் (பிறைவேட்) லிமிடெட் | 51 |
| பிஷவ் கம்ம | 10 |
| லண்மிக் பிறைவேட் லிமடெட் | 5 |
| லங்கா மினறல் | 10 |
| லரெக்ஸ் கிறீன் | 7 |
| பிறைம் பொலிமேர்ஸ் (பிறைவேட்) லிமிடெட் | 18 |

**அவிசாவெல்ல முகாமின் பெறுபேறு பின்வருமாறு:**

| **பரிசோதனை** | **பரிசோதிக்கப்பட்ட எண்.** | **இனங்காணப்பட்ட சுகாதாரப் பிரச்சினைகள்** | **வீதம்** |
|---|---|---|---|
| தொழில் புரிவதற்கான உடற்றகுதி - உடல் பரிசோதனை | 151 | 151 | Fit to work |
| கண் பார்வைப் பரிசோதனை | 151 | 34 | 22% |
| நுரையீரல் தொழிற்பாட்டுப் பரிசோதனை | 100 | 4 | 4% |
| கேட்கும் ஆற்றல் பரிசோதனை | 75 | 10 | 13% |
| தோல் பரிசோதனை | 61 | 2 | 3% |
| Hb,FBS, SGOT, SGPT போன்றவற்றுக்கான இரத்தப் பரிசோதனை | 100 | Nil | Nil |
| BMIகணிப்பு மற்றும் ஆலோசகர்கள் | 151 | 5 | 3% |
| கண் பார்வைப் பரிசோதனை | 100 | 77 | 77% |
| நுரையீரல் தொழிற்பாட்டுப் பரிசோதனை | 151 | 68 | 45% |

**கொக்கல்லை ஊக்குவிப்பு வலயத்தில் வேலைக்குப் பொருத்தமானது பற்றிய மருத்துவ பரிசோதனையின் பெறுபேறு பின்வருமாறு:**

**பின்வருகின்ற கம்பனிகள் கிளினிக்கில் பங்குபற்றியிருந்தன.**

| **கம்பனியின் பெயர்** | **பங்குபற்றியவர்களின் எண்ணிக்கை** |
|---|---|

| | |
|---|---|
| எ.சீ.இ. அப்பிரல்ஸ்பிறைவேட் லிமிடெட் பிறண்டிக்ஸ் அப்பிரல் சொலுசன்ஸ் லிமிடெட் | 5 |
| எ.சீ.இ. அப்பிரல்ஸ்பிறைவேட் லிமிடெட் | 38 |
| லங்கா காமன்ஸ் பிறைவேட் லிமிடெட் | 15 |
| ரெண்ட் செற்றர்ஸ் பிறைவேட் லிமிடெட் | 30 |
| கொக்கல்ல காமன்ஸ் (பிறைவேட்) லிமிடெட் | 20 |
| பெயர் மவுண்ட் அப்பிரல்ஸ் (பிறைவேட்) லிமிடெட் | 37 |
| நோபிள் வியர் (பிறைவேட்) லிமிடெட் | 25 |
| பொலிரெக்ஸ் காமன்ஸ் (பிறைவேட்) லிமிடெட் | 18 |
| வோகியு ரெக்ஸ் (பிறைவேட்) லிமிடெட் | 10 |
| யுனிசெல்லா 1& 11 | 20. |
| அல்பா ரெக்ஸ்ரைல்ஸ் (பிறைவேட்) லிமிடெட் | 17 |
| பி.ஏ.எவ்.எவ். பொலிமேச் (பிறைவேட்) லிமிடெட் | 47 |
| ஜி.எல்.ஜட்சிங் ஏசியா (பிறைவேட்) லிமிடெட் | 57 |

**கொக்கல்லை ஏற்றுமதி ஊக்குவிப்பு வலயத்தின் பெறுபேறு பின்வருமாறு:**

| **பரிசோதனை** | **பரிசோதிக்கப்பட்ட எண்.** | **இனங்காணப்பட்ட சுகாதாரப் பிரச்சினைகள்** | **வீதம்** |
|---|---|---|---|
| தொழில் புரிவதற்கான உடற்றகுதி – உடல் பரிசோதனை | 137 | 2 | 1.4% மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டவை (இந்த நாளில் வீழ்ந்து பின்புறத்தில் காயம் மற்றும் இருதயத் தொற்று) |
| கண் பார்வைப் பரிசோதனை | 137 | 6 | 4.3% |
| நுரையீரல் தொழிற்பாட்டுப் பரிசோதனை | 88 | 18 | 20% |
| கேட்கும் ஆற்றல் பரிசோதனை | 77 | 2 | 2.6% |
| தோல் பரிசோதனை | 137 | 12 | 8.7% |
| Hb, FBS, SGOT, SGPT போன்றவற்றுக்கான இரத்தப் பரிசோதனை | 107 | 10 | 9.3% |
| BMI கணிப்பு மற்றும் ஆலோசகர்கள் | 137 | 15 | 10.9% |

**கட்டுநாயக்க ஊக்குவிப்பு வலயத்தில் வேலைக்குப் பொருத்தமானது பற்றிய மருத்துவ பரிசோதனையின் பெறுபேறு பின்வருமாறு:**

**பின்வருகின்ற கம்பனிகள் கிளினிக்கில் பங்குபற்றியிருந்தன.**

| **கம்பனியின் பெயர்** | **பங்குபற்றியவர்களின் எண்ணிக்கை** |
|---|---|
| மேய்டஸ் பிறைவேட் லிமி. | 18 |
| ரீஜேய் லங்கா பீ.எல்.சி | 40 |
| பிறைம் பொலிமோ் டிவிஷன் | 90 |
| சி.பி.எல் (பிறைவேட் லிமி.) | 80 |
| நெக்ஸ்ற் (பிறைவேட் லிமி.) | 25 |
| இஸ்பெல்லா (பிறைவேட் லிமி.) | 57 |
| யு.ரீ.பீ (பிறைவேட் லிமி.) | 75 |
| எக்ஸ்போ என்ஜினியறிங் (பிறைவேட் லிமி.) | 45 |
| பி.பி.எஸ்.எல். (பிறைவேட்) லிமி. | 120 |
| பிறண்டிக்ஸ் | 20 |
| கே.ஐ.கே பிறைவேட் லிமி. | 65 |
| கொண்கோர்ட் அப்பிரல் (பிறைவேட்) லிமிடெட் | 47 |
| மாஸ் அக்டிவ் (பிறைவேட்) லிமிடெட் | 11 |
| பிஷோவ் கம்மா | 15 |
| லண்மிக் பிறைவேட் லிமிடெட் | 10 |
| குளோபல் அவுட் லேற் | 8 |
| ஷோ & ஷோ | 7 |
| பிறைம் பொலிமோ்ஸ் (பிறைவேட்) லிமி. | 6 |

**பின்வருகின்ற பரிசோதனைகள் கட்டுநாயகா முகாமில் நடத்தப்பட்டன**

| **பரிசோதனையின் பெயர்** | **புங்குபற்றியோரின் எண்ணிக்கை** |
|---|---|
| தொழில் புரியவதற்கான உடற்றகுதி -உடல் பரிசோதனை | 371 |
| NCD பரிசோதனை | 371 |
| கண் பார்வைப் பரிசோதனை | 371 |
| நுரையீரல் தொழிற்பாட்டுப் பரிசோதனை | 106 |

| | |
|---|---|
| கேட்கும் ஆற்றல் பரிசோதனை | 75 |
| தோல் பரிசோதனை | 371 |
| Hb, FBS, SGOT, SGPT போன்றவற்றுக்கான இரத்தப் பரிசோதனை | 188 |
| BMI கணிப்பு மற்றும் ஆலோசகர்கள் | 371 |
| பல் கவனிப்பு மற்றும் அடைத்தல் | 100 |

**கட்டுநாயக ஏற்றுமதி வலயத்தின் பெறுபேறு பின்வருமாறு:**

| **பரிசோதனை** | **பரிசோதிக்கப்பட்ட எண்.** | **இனங்காணப்பட்ட சுகாதாரப் பிரச்சினைகள்** | **வீதம்** |
|---|---|---|---|
| தொழில் புரியவதற்கான உடற்றகுதி – உடல் பரிசோதனை | 371 | 2 | 0.5% நீர்கொழும்பு வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டமை |
| தொற்றாத நோய்களைப் பரிசோதித்தல் | 371 | 2 | 4.8% |
| கண் பார்வைப் பரிசோதனை | 371 | 18 | 1.0% |
| நுரையீரல் தொழிற்பாட்டுப் பரிசோதனை | 371 | 4 | 7.5% |
| கேட்கும் ஆற்றல் பரிசோதனை | 106 | 8 | 2.6% |
| தொழில் புரியவதற்கான உடற்றகுதி – உடல் பரிசோதனை | 75 | 2 | 4.8% |
| தொற்றாத நோய்களைப் பரிசோதித்தல் | 371 | 2 | 1.0% |
| கண் பார்வைப் பரிசோதனை | 371 | 18 | 7.5% |
| நுரையீரல் தொழிற்பாட்டுப் பரிசோதனை | 371 | 4 | 2.6% |

**தே.தொ.பா.சு.நிறுவகம், பௌதீக வலையப் பணிப்பாளரினூடாக உரிய மனித வள முகாமையாளருக்கு அனைத்து மருத்துவ அறிக்கைகளையும் வழங்கும்**

தொழில் புரிவதற்கான உடற்றகுதி மருத்துவ முகாம், பணியாளர்களின் சுகாதார நிலைமையைச் செம்மைப்படுத்தும் குறிக்கோளுடன் நடத்தப்பட்டிருந்தன

**விசேட கருத்திட்டங்கள் - ச.தொ.தாபனம் மற்றும் தே.தொ.பா.சு.நிறுவகத்தின் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றிய பயிற்றுவிப்பவர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் - 2017**

தே.தொ.பா.சு.நிறுவகம் பல ஆண்டுகளாக மேல் மாகாணத்தில் தொழிற்பட்டிருந்ததுடன், நிறுவகத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள குறைந்த வளங்களுடன் நாட்டின் அனைத்துப் பகுதிக்கும் அறிவூட்டலை வழங்கியிருந்தது. தெ.தொ.பா.சு.நிறுவகமானது, வட கிழக்கு மாகாணங்களில் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான அடிப்படை விழிப்புணர்வு குறைவாக இருந்தமையை இனங்கண்டுள்ளது. பணியாளர்களுக்கு பாதுகாப்பான வேலைச் சூழலையும், தொழில்தருநர்களுக்கு பயனுள்ள ஆக்கத் திறனான வெளியீட்டினையும் பெற்றுக்கொடுக்கின்ற உருவாக்குகின்ற பாதுகாப்பான ஆசாரத்தை இலங்கைத் தொழிற்றுறைச் சமூகத்திடையே உருவாக்குவதனை குறிக்கோளொன்றாகக் கொண்டு தே.தொ.பா.சு.நிறுவகம் கடுமையாக முயற்சிக்கின்றது.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் தொழில்நுட்பக் கல்லூரிகளிலிருக்கின்ற தொழில்நுட்ட அறிவுறுத்து நர்களை இலக்கு வைத்து தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தில் விசேட சான்றிதழ் நிகழ்ச்சித் திட்டமொன்றினை சர்வதேச தொழில் தாபனத்துடன் இணைந்து நடத்துவதற்கு தே.தொ.பா.சு. நிறுவகம்

திட்டமிட்டுள்ளமை மைற்கல்லாகும். இதனூடாக, தே.தொ.பா.சு. நிறுவகம் மற்றும் ச.தொ.தாபனத்தின் குறிக்கோள், அறிவுறுத்துநர்களுக்கு இதனை அறியச்செய்து கற்பிப்பது மறுவகையில் அவர்களது உரிய கற்கைத் துறைகளில் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தில் பெற்றுக்கொண்ட அறிவினை இணைத்துக்கொள்ளவும், தொழில்நுட்பக் கல்லூரிகளில் மாணவர்களிடையே பரவச்செய்வதாகவும் இருந்தது. இதனூடாக, வடக்கு கிழக்கு மாகாணங்களில் வளர்ந்துவருகின்ற தொழிற்றுறைகள் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான போதிய அறிவினைக் கொண்டிருக்கின்ற இளைஞர்களை பணிக்கமர்த்த முடியும்.

International Labour Organization

தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார சான்றிதழ் நிகழ்ச்சித்திட்டம் 2017 யூலை மாதம் ஆரம்பிக்கப் பட்டிருந்தது. ஒவ்வொரு மாகாணத்திற்கும் 10 நாள் வதிவிடப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டமாக இருந்ததுன், இதில், விவேகானந்த கல்லூரி, மட்டக்களப்பு, DTET மட்டக்களப்பு, DTET அக்கரைப்பற்று, DTET தெகித்தகண்டிய, ஹாடி தொழில்நுட்பக் கல்லூரி, DTET DTET மன்னார், ORHAN வவுனியா, DTET வவுனியா, ஹரிராஸ் மன்னார், NYSC வவுனியா போன்ற அத்தகைய பல்வேறுபட்ட தொழில்நுட்பக் கல்லூரிகளி லிருந்து தொழில்நுட்ப அறிவுறுத்துநர்களுக்கும் பங்குபற்றியிருந்தனர். இந்த நிகழ்ச்சித்திட்டம் வவுனியாவில் நெல்லி ஸ்டார் ஹோட்டலிலும், மட்டக்களப்பில் மியானி தொழில்நுட்பக் கல்லூரியிலும் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சித்திட்டத்தை வெற்றிகரமாக ஆக்குவதற்கு 10 நாட்களுக்கு மட்டக்களப்பு மற்றும் வவுனியாவிற்கு தே.தொ.பா.சு.நிறுவகத்தின் பணியாளர்களையும் வாகனங்களையும் தே.தொ.பா.சு.நிறுவகம் ஒதுக்கியிருந்தது.

பயிற்றுவிப்பவர்களுக்கான பயிற்சி, தே.தொ.பா.சு.நிறுவகத்தின் பணிப்பாளர் அதிபதி டாக்டர்.என்.சி. அமரசிங்க அவர்களின் தலைமையில், அவர்களால் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றிய அறிமுகம் மற்றும் தொழில்சார் நொய்கள் தொடர்பான அமர்வும் நடத்தப்பட்டு, 2017 யூலை 27 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது.



பல ஆண்டுகள் பயிற்சி மற்றும் அபிவிருத்தியினூடாக, செய்முறையினூடாகவே விழிப்புணர்வு உருவாக்கப்படுவதை தே.தொ.பா.சு.நிறுவகம், இனங்காண்கின்றது. ஆகவே, தீ பற்றிய பாதுகாப்பு அனுபவத்தை பயிற்றுவிப்பவர்களுக்கு வழங்குவதற்கு வவுனியாவில் தீ பயிற்றுவிப்பாளர்கள் மற்றும் தீயணைக்கும் வண்டி கொண்டுவரப்பட்டு தீயணைப்புப் பற்றி தே.தொ.பா.நிறுவகம் ஆலோசனை வழங்கியிருந்தது. தீப்பற்றிய அவசர நிலைமையின்போது எவ்வாறு அதனைக் கையாள்வது மற்றும் தீயணைப்புக் கருவிகள் , நீர்ப்பிரயோகம் என்பது பற்றிய அறிவினைப் பங்குபற்றியவர்கள் பெற்றிருந்தனர். பங்குபற்றிய அனைவருக்கும் கற்கை அனுபவத்தைப் பெற்றிருந்தமை புதிய அனுபவமாகும்.















பங்குபற்றியவர்கள், அவசரமான நிலைமைகளில் முக்கியமான முதலுதவி பற்றிய போதிய அறிவு வழங்கப்பட்டிருந்தது. அவர்கள் சரியான அனுபவத்தைப் பெற்றுக்கொள்வதற்கும், அவர்களது கல்வியில் பெற்றுக்கொண்ட அறிவுடன் இணைந்ததாகவும் இயலச்செய்கின்ற முதலுதவி அடிப்படைகள் தொடர்பில் பயிற்சியளிக்கப்பட்டிருந்தது.







பங்குபற்றியவர்கள், இலத்தினரியல் பாதுகாப்பு இலங்கையில் தொழில்கள் தொடர்பான சட்டவாக்கங்கள், உயரத்தில் வேலை செய்தல், வேலைசெய்கின்ற சூழல் பாதுகாப்பு மற்றும் இரசாயனப் பாதுகாப்பு பற்றிய அறிவினைப் பெற்றிருந்தனர்.





இறுதியாக, தே.தொ.பா.சு.நிறுவகம், வடக்கு, கிழக்கு மாகாணங்களிலிருக்கின்ற பணியாளர்கள் தனியாள் பாதுகாப்பு உபகரணங்களைப் பெற்றிருக்கவோ அல்லது அது பற்றி அறிந்திருக்கவோ இல்லையென்பதை இனங்கண்டிருந்தது. தனியாள் பாதுகாப்பு உபகரணங்கள் தொடர்பான விழிப்புணர்வினை உருவாக்கு வதற்கு சிறந்த வழி பயிற்றுவிப்பவர்களுக்கு அறிவூட்டி, வட மாகாணத்தில் தொழிற்றுறைகளில் எதிர்காலத்தில் பணிக்கமர்த்தப்படுகின்ற தொழில்நுட்ப மாணவர்களுக்கு இச்செய்தியைப் பரப்பச் செய்வதாகும்.



**தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத் துறையில் அளவீடும் ஆராய்ச்சியும்**

தே.தொ.பா.சு.நிறுவகம், தொழில்சார் பாதகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பில் தமது பௌதீக மருத்துவ விஞ்ஞானத்தில் விஞ்ஞான மாணி (சிறப்பு) பட்டத்தின் பகுதி நிறைவேற்றத்திற்கான ஆராய்ச்சியை மேற்கொள்வதற்காக இரண்டு பல்கலைக்கழக மாணவர்களை ஆட்சேர்ப்புச் செய்திருந்தது. ஆராய்ச்சித் தலைப்பு பின்வருமாறு:

**இலங்கையில் தெரிவிக்கப்படுகின்ற தொழில்சார் விபத்துக்கள், தற்போதைய நடைமுறை, சவால்கள் மற்றும் செம்மைப்படுத்துவதில் எதிர்கால வாய்ப்புகள்**

குறிக்கோள் - இலங்கையில் தொழில்சார் ஊறுகளை அறிவிக்கின்ற முறைமை பற்றிய நிலையினை மதிப்பிடுதல்

திறமுறைகள்

தே.தொ.பா.சு.நிறுவகத்தின் பணிப்பாளர் அதிபதி டாக்டர்.என்.சி.அமரசிங்க, கயான் குணதிலக மற்றும் அஷான் செனிவிரத்ன ஆகியோரைக் கொண்ட அணியினால் தெரிவிக்கப்பட்ட குறிக்கோளை அடைவதற்கான பின்வருகின்ற திறமுறைகள் கடைப்பிடிக்கப்பட்டன.

1. இலங்கையில் தற்போதிருக்கின்ற தொழில்சார் விபத்துக்களைத் தெரிவிக்கின்ற முறைமை பற்றிய ஏட்டு மீளாய்வு பெறப்பட்டு, சர்வதேச தொழில் தாபனத்தின் தேவைப்பாடுகளின்படி அறிக்கை யிடுதல்.
2. வெவ்வேறு வளங்களிலிருந்து தொழில்சார் விபத்து தரவுகளைச் சேகரித்தல், தொகுத்தல் மற்றும் பொருத்திப் பார்த்தல்.
3. தற்போதிருக்கின்ற தரவு மற்றும் தகவலின் அடிப்படையில் இடைவெளி பற்றிய பகுப்பாய்வு.


முறையியல்:

இலங்கையில் தற்போது நடைபெறுகின்ற தெரிவிக்கின்ற செயல்முறை பற்றிய உள்ளறிவினைப் பெறுவதே அணியின் முதலாவது பணி இலக்காக 2017 பெப்ரவரி 01 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

**ஆய்வுக் காண்பிப்புகள் பின்வருமாறு :**

அரசாங்க வைத்தியசாலைகளால் சிகிச்சையளிக்கப்படுகின்ற தொழில்சார் விபத்துக்களின் எண்ணிக்கை யுடன் தெரிவிக்கப்பட்ட தொழில்சார் விபத்துக்களின் எண்ணிக்கையை ஒப்பிடும் நோக்கில் 2017 பெப்ரவரி 01 ஆம் திகதி ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டது. இலங்கை தேசிய வைத்தியசாலையின் தற்போது காணப்படுகின்ற சங்சிகையிலிருந்து தரவுகள் பெறப்பட்டிருந்தன. இது, வைத்தியசாலையில் தொழில்சார் விபத்துக்கள் பற்றித் தெரிவிப்பதைப் பதிவுசெய்வதனை நடைமுறைப்படுத்தாமை காரணமாக, தரவு சேகரிப்பதற்கு வைத்தியசாலைப் பதிவுகளை அணுகுவதற்கு முறையான விடுவிப்பினைப் பெற முடியாமை காரணமாக இது இடம்பெற்றிருந்தது. இச் சஞ்சிகையிலிருந்து 2016 ஏப்பிரல் 01 ஆம் திகதியிலிருந்து 2017 மார்ச் 31 ஆம் திகதி வரை பாகுப்பாய்விற்காக கவனத்தில் கொள்ளப்பட்டது. நோயளிகள் அவர்களது தொழில்களுக்கமைவாக 09 குழுமங்களாகப் வகைப்படுத்தப்பட்டிருந்தனர்.இந்தக் குழுமங்கள்,தேர்ச்சியுள்ள தொழில், தொழில் நிபுணத்துவம் (நிருவாக வேலை), படைகள், எழுதுநர்கள், தொழிலற்றோர், கமத் தொழில், மாணவர்கள், மீன்பிடி, ஏனையவை. இந்தத் தரவின் அடிப்படையில் அது பெறப்பட்டதுடன், ஓராண்டு காலப்பகுதியில் ஒரு வருட காலப்பகுதி 8,774 தொழில்சார் விபத்தக்கள் அறிக்கையிடப் பட்டமையைக் காணமுடிந்தது. ஒவ்வொரு வகைப்பாட்டின் கீழ் கீழான விபத்துக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| தேர்ச்சி யுள்ள தொழில் | தொழில் தகைமை யுள்ளோர் | படைகள் | எழுது வினைஞர்கள் | தொழில் அற்றோர் | விவசாயம் | மாணவர் கள் | மீன்பிடி | ஏனையவை | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 5,485 | 210 | 143 | 91 | 324 | 15 | 90 | 15 | 2,201 | **8,774** |
| 62.51% | 2.39% | 1.63% | 1.04% | 3.69% | 0.17% | 1.03% | 0.17% | 25.09% | **100%** |




இந்தத் தரவு நோயாளி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் பெறப்படுகின்றது. நோயாளிகளைத் தொடர்ந்து அவதானிக்கின்ற முறைமையொன்றில்லையாகையால், அனுமதிக்கப்பட்டதைத் தொடர்ந்துதான நோயாளி இறந்தாரா என்பதைக் கண்டறிவதற்கு முறைமையொன்று உருவாக்கப்படவில்லை. மரணத்தை ஏற்படுத்துகின்ற தொழில்சார் காயங்களின் எண்ணிக்கையைக் கண்டறியும் நோக்கில் நீதிசார் மருத்துவ அலுவலர்களின் அலுவலகத்திடமிருந்து தகவல்கள் பெற்றுக்கொள்ளப்பட்டது. இது, அலுவலகத்திலிருக்கின்ற பதிவுகளிலிருந்து மேற்கொள்ளப்பட்டது. 2017 சனவரி மாதம் முதல் பெப்ரவரி மாதம் வரையான காலப்பகுதியில் 12 தொழில்சார் விபத்துக்கள் ஏற்பட்டிருந்தன. பாரிய காயங்கள் எதுவும் இந்தப் பிராந்தியத்தில் பதிவுசெய்யப்படவில்லையாகையால் புள்ளிவிபரவியல் அணுகுமுறையில் விலகலுக்கிட்டுச் செல்கின்றது என்பது கோடிட்டுக்காட்டப்படுதல் வேண்டும். நோயாளி கொழும்பு மாவட்டத்திற்கு வெளி இடங்களிலிருந்து அனுமதிக்கப்படக்கூடுமாகையால் புள்ளிவிபரவியல் பகுப்பாய்வினை நடத்துவதற்கு இயலாமைக்கான பிரதான காரணமாகும்.

**தொகுப்பு**

இதன்படி, உரிய அதிகாரிகள், தொழில்சார் விபத்துக்கள் மற்றும் நோய்கள் பற்றிய நம்பிக்கையான, காலத்திற்குரிய தரவுகளைச் சேகரிப்பதற்கு உரிய முறைமையொன்றினை உருவாக்குதல் வேண்டும்.

**தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் வேலைக் கிரமம்**

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகமானது, சகல வேலைத்தளங்களிலுமுள்ள தொழிலாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும், சுகாதாரத்தை உயர்த்தும் நோக்கில் தனது வேலைக்


கிரமத்தை அமைத்துக்கொள்கின்றது. இந்த இலக்கினை எட்டுவதற்கு பின்வரும் செயற்பாடுகளை நிறைவேற்றுகின்றது.

***சூழலியற் கண்காணிப்பு*** - தொழிற்றுறையில் வேலைசெய்யும் சூழலின் தரத்தை உறுதிசெய்துகொள்ள வெப்பநிலை, ஒளி, சத்தம், கிருமித் தொற்றுள்ள வாயுக்கள் மற்றும் உள்ளக வளியின் தரம் முதலான வேலைத்தலச் சூழல்சார் ஆபத்துகளை அளவிடும் பொறுப்பை தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம் எடுத்துக்கொள்கின்றது. இது 2017 ஆம் ஆண்டில் 183 இற்கும் மேற்பட்ட வேலைத்தல சூழலியற் கண்காணிப்புச் சேவைகளை நிபுணத்துவ குழாமொன்றினால் வழங்கியுள்ளது.

***உயிரியற் கண்காணிப்பு*** – தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகமானது, தொழிற்றுறையின் தேவைகளில் ஒன்றான வேலை செய்வதற்கான உடற்றகுதி மதிப்பீட்டுச் சேவையினை மேற்கொண்டு வருகிறது. அதற்கமைய தொழிலாளர்களில் வெளிப்படும் நோய் அறிகுறிகளுக்கு அமைவாக உடற் பரிசோதனை, உடல் நிறைச் சுட்டிக் கணிப்பு, குருதி அமுக்கம் மற்றும் நாடித்துடிப்பு விகிதப் பரிசோதனைகள், கட்புலப் பரிசோதனை, தொடர்ச்சியான இரத்தப் பரிசோதனை செவிப்புலப் பரிசோதனை நுரையீரல் தொழிற்பாடு குறித்த பரிசோதனை முதலான பரிசோதனைகளை நடாத்துகின்றது.

***இடர் மதிப்பீடும் சோதனை நடவடிக்கைகளும்*** - தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகமானது, இடர் மதிப்பீடு மற்றும் தொழிற்றுறைசார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான சோதனை நடவடிக்கைகளை நடாத்துவதுடன், தொழிலகத்தில் காணப்படும் தொழில்சார் ஆபத்துகளைச் சுட்டிக்காட்டி அவற்றைக் குறைப்பதற்கான பரிந்துரைகளையும் வழங்குகின்றது. அதுமட்டுமல்லாமல் இடர் மதிப்பீடு மற்றும் சோதனை நடவடிக்கைகளில் ஒழுங்கினைப் பேணுவதற்கான புதிய மென்பொருளை தற்போது அறிமுகப்படுத்தியுள்ளது.

- ***இடர் மதிப்பீடு மற்றும் அறிக்கை தயாரித்தலுக்கு உதவுதல் - அறிக்கை எழுதுவதற்கான புதிய தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தியமை (i-pad மற்றும் தனிப்பயனாக்கு படிம அச்சுடன்கூடிய தொடரறா மென்பொருள்***



**பாதுகாப்பு வாரத்தில் பல்கலைக்கழகங்களுடன் கூட்டிணைவு**

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம், கொழும்புப் பல்கலைக்கழகத்தின் மனிதவள முகாமைத்துவத் துறையுடனும், மொரட்டுவப் பல்கலைக்கழகத்தின் இயந்திரப் பொறியியற்றுறையுடன் இணைந்து அமர்வு ஒன்றினை நடாத்தியிருந்ததுடன், இது மொரட்டு பல்கலைக்கழக துணைவேந்தரினால் அதிகளவில் பாராட்டப்பட்டிருந்ததுடன், தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிலையினைச் செம்மைப்படுத்துவதற்கும், நாட்டின் பாதுகாப்பான ஆசாரமொன்றை உருவாக்குவதற்கும் முழுமையான ஒத்துழைப்பினை வழங்கியிருந்தார்.

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம், கொத்தலாவல பாதுகாப்பு கல்லூரியுடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளதுடன், பல்கலைக்கழக மாணவாகளுக்கு சில பயிற்சி அமர்வுகளையும் நடத்தியுள்ளது.

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம், மருத்துவ பட்டப்பிற்படிப்பு நிறுவகத்தில் பங்கெடுப்பதுடன், பட்டப்பிற்படிப்பு மாணவர்களுக்கு நிபுணத்துவ சேவைகளை வழங்குகின்றது.




**தே.தொ.பா.சு.நிறுவகம் மூலமான SRS நிகழ்ச்சித்திட்டங்கள்**

**இரத்தினபுரி மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கான மருத்துவ முகாம்**

நாட்டில் வியாழக்கிழமை ஆரம்பித்த பாரிய மழையினால் அதிகளவில் மரணமடைந்து 102 பேர் பலர் காணாமல் போயுள்ளதாக இலங்கை அனர்த்த முகாமைத்துவ நிலையம் திங்கட்கிழமை அறிவித்திருந்தது. 75,000 பேருக்கும் அதிகமானோர் நிவாரண முகாம்களில் தங்கியிருப்பதாக அலுவலர்கள் தெரிவித்திருந்தனர்.

2003 ஆம் ஆண்டிலிருந்து இலங்கையைத் தாக்கிய பாரிய மழை இதுவாகும். மேல் மற்றும் தென் பிராந்தியங்களில் அதிகளவில் பாதிக்கப்பட்ட பிரதேசங்கள் களுத்துறை, இரத்தினபுரி மற்றும் மாத்தறை ஆகும். வெள்ளத்தால் மூடப்பட்ட கிராமங்கள் மற்றும் வீதிகளுக்கு இராணுவப் படகுகள் விரைந்து சென்று மக்களைப் பாதுகாக்கின்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்ததுடன், நிவாரணங்களையும் வழங்கியிருந்தனர்.

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம், தேசிய அதிகாரமாக, நாட்டில் தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்தை வழங்கி, தமது நாளாந்த வாழ்க்கை சீர்குலைந்து பாதிக்கப்பட்ட வர்களுக்கு ஆதரவளிப்பதற்குத் திட்டமிட்டிருந்தது. தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் மருத்துவ உதவி, சப்பிரகமுவ மாகாணத்தில் "SLMC" யின் ஆதரவுடன் மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டிருந்தன. பதினைந்து மருத்துவர்கள், மருந்தாளர்கள் மற்றும் சில தாதிகள் மற்றும் தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவக அணியினர் மருத்துவ முகாமில் கலந்துகொண்டு வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரவளித்திருந்தனர்.

பின்வருகின்ற சேவைகள் வழங்கப்பட்டன:


1. அனைத்து நோயாளிகளுக்கும் உடல் பரிசோதனை
2. குறிப்பிட்ட நோய் நிலைமைகளுக்கான சிக்சிசை
3. தேவையாயின் NCD களுக்குரிய ஒரு மாத மருந்துப் பொதி
4. சாத்தியமாயின் பின்னரும் தொடருதல்
5. தேவையானவர்களுக்கு 500 தண்ணீர் போத்தல்கள்
6. முகாம்களின் நாளாந்த தேவைகளுக்கான பொதி







படம்: இரத்தினபுரி மாவட்டத்தில் வெள்ளத்திலிருந்து தப்பித்த மக்கள்




படம்: ஓசோன் மற்றும் வழிமண்டல நிருவாகம் - ஐக்கிய அமெரிக்க வாணிபத் திணைக்களம்

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகப் பதவியினர், தனிப்பட்டரீதியில் பணம் சேகரித்த துடன், மருத்துவர் பந்துக விஜயரத்ன வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கான ஏனைய பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கு தன்னிச்சையாக பணம் வழங்கியிருந்ததுடன், நாளாந்த தேவைகளுக்குரியவை கொள்வனவு செய்யப்பட்டு தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகப் பதவியினரால் பொதி செய்யப்பட்டிருந்தது. மருத்துவர்களின் உதவியைப் பெற்றுக்கொள் வதற்கான திட்டம் பற்றி அறிவித்திருந் ததுடன், பேராசிரியர் சந்திரிகா விஜயரத்ன மற்றும் சில மருத்துவ நிபுணர்கள் உள்ளடங்கலாக 18 மருத்துவர்கள் தன்னார்வத்துடன் உதவியை வழங்கியிருந்தனர். இதன்படி, 18 மருத்துவர்கள் தமது பங்கேற்பினை உறுதிசெய்திருந்தனர்.

இந்த அணி காலை 9.30 மணியளவில் இரத்தினபுரியைச் சென்றடைந்ததுடன், தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகப் பதவியினரின் தலைமையில் 3 அணிகளாகப் பிரிந்திருந்தனர். ஒவ்வொரு அணியும் 7-8 மருத்துவர்களையும், உதவிப் பதவியணியினையும் கொண்டிருந்தது. பிரதான மூன்று அமைவிடங்கள் இரத்தினபுரி, பத்துகேதர, பல்மதுள்ளை, கஹவத்தை மற்றும் மாரப்பண போன்ற மூன்று அணிகளால் மேவப்பட்டிருந்தன.

| அமைவிடங்கள் | இரத்தினபுரி / பத்துகேதர | மாரப்பண | பல்மதுள்ளை/கஹவத்தை |
|---|---|---|---|
| தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவக அணி | தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவக அணி<br>மருத்துவர் அமரசிங்க<br>சித்திரா மதுசாணி<br>லக்ஷ்மன் | சரித்<br>வினோதினி<br>லக்மால்<br>கயான் | மோகன்<br>ருவாணி<br>வசந்த |
| மருத்துவர் அணி | மருத்துவர் நிபுணி அமரசிங்க<br>மருத்துவர் ஹேறொமோட்<br>மருத்துவர் லசந்த | பேராசிரியர் சந்திரிகா விஜய்ரத்ன<br>மருத்துவர் பாலிக | பேராசிரியர்.பீ.ஜே.சீ.பெரேரா |
| சுவராமவாசனா அணி | | | திலக்<br>சாரதி |
| ஆதரவு அணி | விஹார | | கஹந்த |

| | | | |
|---|---|---|---|
| **பெறுபேறுகள்** | | | |
| உடல் பரிசோதனை | 172 | 186 | 242 |
| மருந்துகள் விநியோகம் | 172 | 186 | 242 |
| இனங்காணப்பட்ட பிரச்சினைகள் வீகிதமாக | தோல் மற்றும் கால் பாதத்தில் தொற்றுநோய் 33%<br>கண் வலி – 03%<br>மூச்சுச் சீரின்மை 23%<br>வாந்திபேதி 10%<br>ஏனைய நிலைமைகள் 31% | தோல் மற்றும் கால் பாதத்தில் தொற்றுநோய 45%<br>கண் வலி – 00%<br>மூச்சுச் சீரின்மை 33%<br>வாந்திபேதி 10%<br>ஏனைய நிலைமைகள் 12% | தோல் மற்றும் கால் பாதத்தில் தொற்றுநோய 10%<br>கண் வலி – 02%<br>மூச்சுச் சீரின்மை 43%<br>வாந்திபேதி 5%<br>ஏனைய நிலைமைகள 40% (DM/உயரமுத்தம்) |
| மே 31 இல் 1 ஆவது மருத்துவத் தொடர்பு | 99% | 95% (பெருந்தோட்ட மருத்துவர் விஜயம் செய்தமை) | 99% |

**கிளினிக்கின் பின்னர் இனங்காணப்பட்ட பிரதான பிரச்சினைகள் பின்வருமாறு:**

நடமாடும் இடங்களில் அறு நூறு பேர் பங்குபற்றியிருந்ததுடன், இதில் பங்குபற்றியவர்களில் 97% மானோர் வெள்ளப்பெருக்கின் பின்னர் மருத்துவரைச் சந்திப்பது இதுவே முதல் தடவையென்பதைத் தெரிவித் திருந்தனர். ஆனால், பல்மடுல்லையில் மட்டுமே அரச மருத்துவ அலுவலர் சில இடங்களுக்கு விஜயம் செய்து சிகிச்சையளித்துள்ளார்.

அனைத்து வயதினரும் பங்குபற்றியிருந்ததுடன், 14.5% (73) மானோர் 10 வயதிற்கும் குறைந்தவர்களே அதிகளவில் இருந்திருந்தமையை பல்மடுல்லவில் அவதானிக்கமுடிந்திருந்தது. இந்த மூன்று கிளினிக்கு களிலும் குறைந்தளவிலான (10 பேர்) கற்பிணித் தாய்மார்களே கலந்துகொண்டிருந்தனர்.

வேறுபட்ட அமைவிடங்களினடிப்படையில் நோய்களின் நிலைமை காணப்பட்டிருந்ததுடன், விதித்துரைக் கப்பட்ட மருந்துகள் வெள்ளத்தால் அடித்துச்செல்லப்பட்டதால் வயோதிபர்கள் சிலர் NCD இற்கான சிகிச்சையின்றி அவதியுற்றிருந்ததுடன், எமது அணி சிகிச்சையளித்திருந்ததுடன், அவர்கள் தமது சிகிச்சை பற்றி சரியாக எதுவும் தெரியாதிருந்தமையால் (கிளினிக் புத்தகம் வெள்ளதில் அடித்துச் செல்லப் பட்டமையால்) அவர்களுக்கு சில நாட்களுக்கு சிகிச்சையளிக்கப்பட்டது.

பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கான சுத்திகரிப்புப் போன்ற அத்தகைய அடிப்படை சேவைகள் காணப் பட்டிருக்கவில்லையென்பதுடன் ஆதரவு தேவைப்பட்டிருந்தது.

இதற்குமேலும், மின்சார விநியோகம் சீரற்றிருந்தமையால். மெழுகுதிரிகள் மற்றும் தீப்பெட்டிகள் பாதிக்கப் பட்டவர்களுக்கு அடிப்படைத் தேவையாகவிருந்தது.

**பாராட்டுதல்கள்**

இது, தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தினால் ஆரம்பிக்கப்பட்ட SLMA உடன் இணைந்த இணைந்த முயற்சியொன்றாக இருந்தது. தெ.தொ.பா.ச. நிறுவகத்தின் பணிப்பாளர் அதிபதி சம்பிக றணவக ஆகிய நான் SLMA அணியினால் விசேடமாக, பேராசிரியர் சந்திரிகா விஜயரத்ன, டாக்டர்

பிறமோத மற்றும் டாக்டர் லசந்த வணிகதுங்க அகியோரால் வழங்கப்பட்ட கௌரவமான சேவையைப் பெரிதும் பாராட்டுகின்றேன்.

தேசிய அனர்த்தத்தின்போது இந்த நிகழ்வினை வெற்றிகரமாக்குவதற்கு தங்களின் அர்ப்பணிப்புடனான சேவையை நல்கிய தே.தொ.பா.சு.நிறுவகத்தின் பதவியினர் அனைவருக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**தொழில்சார் புனரமைப்பு மற்றும் தொழில்சார்ரீதியில் அங்கவீனமுற்றுப் பாதிக்கப்பட்டவர்களுக்கு செயற்கை உறுப்புகளை வழங்குதல்**


இது, தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தினால் விசேடமாக, தொழில்சார் விபத்தினால் தொழில்சார்ரீதியில் அங்கவீனமுற்றுப் பாதிக்கப்பட்டவர்களுக்கு புனர்வாழ்வளிப்பதற்கு நடத்தப்பட்ட மிகவும் விசேடமான கருத்திட்டமொன்றாகும். தொழில்சார்ரீதியில் அங்கவீனமுற்றுப் பாதிக்கப்பட்ட 15 பேருக்கு இலங்கையரால் உருவாக்கப்பட்ட மிகவும் எளிதான செயற்கை உறுப்புகளை அவர்களுக்கு வழங்கி தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம் ஆதரவளித்திருந்தது. இந்த உறுப்புகள் அவர்கள் முன்னர் வகித்த தொழில் புரிவதற்கு பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுகின்றன. இதன்படி, பெரும்பாலும் அனைத்து வேலையாளர்களும் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள செயற்கை உறுப்புகளுடன் மீளவும் இயங்க முடிகின்றது.

**தே.தொ.பா.சு.நிறுவகத்திற்கான தகவல் தொழில்நுட்பம் சார்ந்த முகாமைத்துவ முறைமை**

தே.தொ.பா.சு.நிறுவகம் மொறட்டுவப் பல்கலைக்கழகத்துடன் ஒருங்கிணைந்து பயிற்சித் தரவுத் தளத்தை விருத்தி செய்வதற்கு முடிந்துள்ளதுடன். தற்போது பயிலுநர்கள் அனைவரும் பயிற்சித் தரவுத் தளத்திற்குள் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன், அதனுடன் சுமூகமாக இயங்குகின்றது.

**இணையத்தை சீரமைத்தல்**

தே.தொ.பா.சு.நிறுவகம், இணையத்தைச் சீராக்கி, இணையத்தளத்தின் இயலுமையை அதிகரிக்க முடிந்துள்ளது.




## ISO 9001


தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம் ISO 1900/2015 இனைப் பெற்றுக்கொள்ள முடிந்ததுடன், தற்போது சுமூகமான முகாமைத்துவ முறைமையைக் கொண்டியங்குகின்றது.

**சான்றிதழ் பார்வைக்காக**




**தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் வெட்டுமுகம்**

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகமானது, 2017 ஆம் ஆண்டில் எமது நிறுவகத்தின் வெட்டுமுகத்தை விருத்திசெய்ய முடிந்திருந்ததுடன், அதனை நாம் ஊக்குவிப்பு சாதனமாகவும் பயன்படுத்துகின்றோம்.




**தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் கூட்டுறவு வீடியோ**

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகமானது, எமது கூட்டுறவு வீடியோவினை விருத்தி செய்துள்ளதுடன், தற்போது அதனை நாம் எமது ஊக்குவிப்பு சாதனமொன்றாகப் பயன்படுத்தி வருகின்றோம்.

**நிறுவனத்தின் திடநிலையும் அதன் வளர்ச்சியும்**


தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகமானது, தொழிற்றுறைக்கான முதன்மைச் சேவை வழங்குநராகத் தனது பெயரை நிலைநாட்டியுள்ளது.

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகமானது, 2015 ஆம் ஆண்டில் தனது முன்னேற்றத்துக்கான முதல் அடியை எடுத்து வைக்க விரும்பி "உற்பத்தித்திறன் விருதுகள் 2015" விருதுக்கு விண்ணப்பித்தது. அதற்காக உற்பத்தித்திறன் கருத்திட்ட முன்மொழிவொன்றையும் விசேட இலட்சினை ஒன்றையும் உருவாக்கி, உற்பத்தித்திறன் விருதுகள் சாதனை உத்தியை அடைவதற்கான விரிவானதொரு கருத்திட்டத்தை ஆரம்பித்திருந்தது.


**2011 தொடக்கம் 2017 வரை தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம் சேவை வழங்கும் இடப் பரம்பல்**





சேவை வழங்கலானது 2011 இல் 33 தொழிற்றுறைகளை மட்டும் உள்ளடக்கி மேல் மாகாணத்திற்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டது





சேவை வழங்கலானது 2012 இல் 60 தொழிற்றுறைகளை மட்டும் உள்ளடக்கி மேல் மாகாணத்திற்கும் மத்திய மாகாணத்திற்கும் மட்டுப்படுத்தப்பட்டது.




2013 இல் மேல், மத்திய, தென், வடமேல், வடக்கு மாகாணங்களில் 90 தொழிற்சாலைகள் உள்ளடக்கப்பட்டிருந்தன




2015 -2016 இற்கிடையில் 500 தொழிற்சாலைகளை உள்ளடக்கி எமது சேவைகளை வழங்க முடியும்




**2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில் தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம் நாடு முழுவதும் தனது சேவைகளை விரிவுபடுத்தியுள்ளது.**

- **தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரக் கற்கை நூலகம்**

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் தரைத் தளத்தில் அமைந்திருக்கும் நூலகமானது, நூல்கள், பருவ இதழ்கள், கையேடுகள், செய்தி அறிக்கைகள், கட்டுரைகளைக் கொண்டிருக்கின்ற தொழில்சார் பாதுப்புக்காக மட்டுமே குறித்தொதுக்கப்பட்டுள்ள விசேட நூலகமாகும். இது தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் பற்றிக் கற்பதற்கு ஆர்வமுள்ள வாசகர் எவரும் பயன்படுத்க்கூடிய உசாத்துணை நூலகமாகும். மேலும், எமது நூலகம், அனைத்து வேலை நாட்களிலும், வார இறுதி நாட்களிலும் வாசகர்களுக்காக திறந்திருக்கின்றது. 2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில் தே.தொ.பா.சு.நிறுவகம் நூலகத்திற்குப் புதிய நூலகவியலாளர் ஆட்சேர்ப்புச் செய்துள்ளதுடன், புதிய நூலகவியலாளரின் வழிகாட்டலின் கீழ் நூலகத்தின் உட்கட்டமைப்பு மீள விருத்திசெய்யப்பட்டது. நிறுவகத்தின் தரத்தைச் செம்மைப்படுத்துவதற்காக 2017 ஆம் ஆண்டு காலப்பகுதியில் புதிய நூல்களும் சஞ்சிகைகளும் கொள்வனவு செய்யப்பட்டன.

பின்வரும் வகையான புத்தகங்கள் நூலகத்தில் கிடைக்கப்பெறுகின்றன.

- கைத்தொழில்
- சூழல்
- பொதுமக்கள்
- வேலைக்குகந்த சூழல்
- தொழில்நுணுக்கப் பாதுகாப்பு
- இரசாயனங்களிலிருந்து பாதுகாப்பு
- தொழில்சார் நோய்கள்
- கைத்தொழிற் சட்டங்களின் சட்டவாக்கம்
- நச்சுப் பொருளியல்
- தண்ணீர் மற்றும் சுத்திகரிப்பு


தே.தொ.பா.சு. நிறுவகப் பதவியினரின் பொழுதுபோக்கு







**நிதிப் பகுப்பாய்வு 2011 – 2017**




<u>**நிதிப் பகுப்பாய்வு 2016 – 2017**</u>

| | 2016 | 2017 |
|---|---|---|
| தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார பாடநெறியிலிருந்து கிடைத்த வருமானம் | 13,420,433.00 | 19,293,425.00 |
| சூழலியல் அளவீடுகளிலிருந்து கிடைத்த வருமானம் | 9,380,900.00 | 10,987,630.00 |
| பிற நிறுவனங்களுடன் ஏற்படுத்திக்கொண்ட உடன்படிக்கைகள் மூலம் வழங்கிய சேவைகளிலிருந்து கிடைத்த வருமானம் | 3,363,933.75 | 5,209,602.15 |
| மருத்துவப் பரிசோதனை நடவடிக்கைகள் மூலம் கிடைத்த வருமானம் | 1,753,550.00 | 4,399,492,50 |
| தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத் தினத்திலிருந்து பெறப்பட்ட வருமானம் | 15,352,750.00 | 4,927,400.00 |
| (தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் அபிவிருத்தி நிதி) வட்டி மூலம் கிடைத்த வருமானம் | 4,979,759.00 | 8,673,883.60 |
| தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகத்தின் உறுப்புரிமையிலிருந்து பெறப்பட்ட வருமானம் | - | 85,500.00 |
| ஏனைய வருமானங்கள் | 247,308.00 | 313,679.25 |
| **மொத்தம்** | <u>48,498,633.84</u> | <u>53,890,612.50</u> |

**நிதி நிலைமை பற்றிய கூற்று**

**தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம்**

**2017 திசெம்பர் 31 இலுள்ளவாறான ஐந்தொகை**

| | | 2017 | 2016 |
|---|---|---|---|
| **சொத்துகள்** | | **ரூபா** | **ரூபா** |
| **அசையும் சொத்துகள்** | | | |
| பணமும் பணத்திற்கு நிகரானவையும் | **குறிப்பு 1** | 9,306,905.65 | 4,458,171.75 |
| பெறக்கக்கூடியவை | **குறிப்பு 2** | 11,771,304.84 | 14,223,633.35 |
| அபிவிருத்தி நிதி | | 80,802,152.99 | 59,950,019.76 |
| | | 101,880,363.48 | 78,631,824.86 |
| **அசையாச் சொத்துகள்** | | | |
| திறைசேரிக் கணக்குகள் | | 267,500.00 | 267,500.00 |
| பொறித்தொகுதியும் உபகரணங்களும் | **குறிப்பு 3** | 21,630,307.50 | 21,137,628.38 |
| அமைச்சினால் செய்யப்பட்ட மூலதனச் செலவுகள் | | - | - |
| | | 21,897,807.50 | 21,405,128.38 |
| மொத்தச் சொத்துகள் | | 123,778,170.98 | 100,036,953.24 |
| **பொறுப்புகள்** | | | |
| **நடப்புப் பொறுப்புகள்** | | | |
| செலுத்தக்கூடியவை | **குறிப்பு 5** | 5,063,745.51 | 1,997,414.53 |
| | | 5,063,745.51 | 1,997,414.53 |
| மொத்தப் பொறுப்புகள் | | | |
| தேறிய சொத்துகள் | | 118,714,425.47 | 98,039,538.71 |
| **தேறிய சொத்துகள்** | | | |
| | | 115,695,761.08 | 92,206,989.71 |
| திரட்டிய மேலதிகம் | **குறிப்பு 4** | 2,028,664.39 | 4,182,549.00 |
| மருத்துவ உபகரணங்கள் நன்கொடை – தேசிய விஞ்ஞான மன்றம் | | 990,000.00 | 1,650,000.00 |
| | | 118,714,425.47 | 98,039,538.71 |

டபிள்யூ.ஜே.எல்.யூ. விஜயவீர
தவிசாளர்
தே.தொ.பா.சு.நி

பீ.எம்.கே.பெரேரா
உ.ப. நிதி
தே.தொ.பா.சு.நி

**நிதிச் செயலாற்றுகைக் கூற்று**

**தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகம்**

**2017 திசெம்பர் 31 இலுள்ளவாறு**

| **வருவாய்** | 2017 | 2016 |
|---|---|---|
| திறைசேரி மானியம் | 2,220,827.79 | 3,200,000.00 |
| தொழிற்பாட்டு வருமானம் | 53,890,612.50 | 48,498,633.84 |
| | 56,111,440.29 | 51,698,633.84 |
| கழிக்க: | | |
| **செலவுகள்** | | |
| நிருவாகச் செலவுகள் | 34,148,114.14 | 31,771,349.69 |
| நிதி அறவீடுகள் | 293.25 | 21,381.88 |
| பெறுமானத்தேய்வு | 3,428,586.53 | 4,104,282.61 |
| மொத்தச் செலவுகள் | 37,576,993.92 | 35,897,014.18 |
| **வருடத்துக்கான மிகை** | **18,534,446,37** | **15,801,619.99** |

## நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள்

## 1. முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள்

### 1.1. நிறுவனத்தை அறிக்கையிடல்

தேசிய தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவகமானது 2005 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28 ஆம் திகதி இலங்கை தொழிற்சங்க உறவுகள் மற்றும் மனிதவலு அமைச்சின் கீழ் உருவாக்கப்பட்டது. எமது நிறுவனமானது முறையான சுகாதாரம், பாதுகாப்பு தொடர்பில் விழிப்புணர்வினை ஏற்படுத்துவதன் மூலம் அனைத்து மக்களுக்கும் சிறந்த வேலைச் சூழலை உருவாக்குவதில் அர்ப்பணிப்புடன் செயற்படுகிறது. இந்த நிறுவனம், இல. 97, ஜாவத்தை வீதி, கொழும்பு – 05 என்ற முகவரியில் அமைந்துள்ளது.

### 1.2. முதன்மைச் செயற்பாடுகளும் நடவடிக்கைகளின் தன்மைகளும்

தே.தொ.பா.சு.நி, முறையான சுகாதாரம், பாதுகாப்பு தொடர்பான விழிப்புணர்வுகளை ஏற்படுத்துவதன் மூலம் அனைத்து மக்களுக்கும் சிறந்த வேலைச் சூழலை உருவாக்குவதில் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றது. இதன் செயற்பாடுகள் இற்றைப்படுத்தப்பட்ட தரவுகளைப் பரப்புதல், அறிவுரை ஆலோசனைச் சேவைகளை வழங்குதல் என்பவற்றை உள்ளடக்கு கின்றது. இந்த நிறுவனம் தொழிலாளர்களுக்கு கல்வி மற்றும் பயிற்சிகளை வழங்குவதோடு இந்த பயிற்சிகளால் பயனடையக்கூடிய ஏனைய தரப்பு மக்களுக்கும் பயிற்சிகளை வழங்குகிறது. அத்தோடு தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரத் துறையில் ஆய்வுக் கற்கைகள், ஆராய்ச்சிகள் என்பவற்றுக்கும் தனது ஒத்துழைப்பை வழங்குகின்றது.

### 1.3. தயார்ப்படுத்தலுக்கான அடிப்படை

(அ) இணக்கக் கூற்று

நிறுவனத்தின் நிதிக்கூற்றானது ஐந்தொகை, வருமானக் கூற்று, உரிமைப் பங்கில் மாற்றக் கூற்று, பண ஓட்டக் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்கான குறிப்பு முதலானவற்றைக் கொண்டுள்ளது. இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் ("ICASL") பரிந்துரைக் கப்பட்ட சிறு முயற்சியாளர்களுக்கான இலங்கைக் கணக்கீட்டு நியமத்திற்கு (SLASSE) அமைவாக இக்கூற்றுகள் தயாரிக்கப்படுகின்றன.

(ஆ) அளவீடுகளுக்கான அடிப்படை

நிதிக்கூற்றானது வரலாற்றுச் செலவு அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருக்கிறது. நிதிக்கூற்றின் பணவீக்கக் காரணிகளுக்காக எந்தவொரு சரிப்படுத்தல்களும் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை.

(இ) கையாளப்படுகின்ற நாணயம்

நிதிக்கூற்றானது நிறுவனத்தின் தொழிற்படு நாணய அலகான இலங்கை ரூபாவிலேயே சமர்ப்பிக்கப்படுகின்றது.

## (2) ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம்

### i. இனங்காணுதலும் அளவீடும்

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் என்பன செலவற்ற திரட்டிய பெறுமானத்தேய்வு மற்றும் திரட்டிய பழுது இழப்புகள் என்பனவற்றில் அளவிடப்படுகின்றன.

ஒரு இயந்திரப்பொறி அல்லது உபகரணத்தின் செலவு என்பது அதனது கொள்வனவு விலை மற்றும் அதன் எதிர்பார்க்கப்படும் பயன்பாட்டுக்கேற்ற செயல்படு தன்மைக்குக் கொண்டு வருவதற்கு உறப்படுகின்ற நேரடிச் செலவு என்பவற்றை உள்ளடக்குகின்றது.

ஒரு ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரண வகையின் பாகத்தினை மாற்றுவதற்கு உறப்பட்ட செலவு தனியாகக் கணக்கு வைக்கப்படும் செலவானது அகற்றப்படும் பாகத்தினைக் காவிச்செல்லும் கூலியுடன் இணைத்து மூலதனச் செலவு வைக்கப்பட்டது. இதனாலுண்டான பிற செலவுகள் ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரண வகையில் அடங்கும் எதிர்காலப் பொருளியல் நன்மைகளை அதிகரிக்கும் பட்சத்திலேயே மூலதனச் செலவில் வைக்கப்படுகின்றன.

ii. ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம்

(அ) செலவு ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம்

**(ஆ)பெறுமானத்தேய்வு**

பெறுமானத்தேய்வு ஆதனத்தின் கணிக்கப்பட்ட பாவனைக் காலம் மீதான ஓர் நேர்கோட்டு அடிப்படையிலான வருமானக் கூற்றில் இனங்காணப்படுகின்றது.

தற்போதைய மற்றும் ஒப்பீட்டுக் காலப்பகுதிக்காக மதிப்பிடப்பட்ட பாவனைக்காலம் பின்வருமாறு:

| | **ஆண்டு** |
|---|---|
| பொறித்தொகுதி மற்றும் இயந்திரம் | 10 |
| கணினி உபகரணங்கள் | 5 |
| தளபாடங்களும் பொருத்துகளும் | 10 |
| ஒலி அமைப்புச் சாதனங்கள் | 5 |
| மருத்துவ உபகரணங்கள் | 10 |
| ஏனைய சொத்துகள் | 10 |

கொள்வனவு செய்த ஆண்டுக்கு பெறுமானத் தேய்வு இல்லை என்பதுடன் அகற்றப்படுகின்ற ஆண்டில் முழுமையான பெறுமானத்தேய்வு என்பது பெறுமானத் தேய்வுக் கொள்கையாகும்.

வருமானம் மற்றும் செலவீனம்

(அ) உள்வரும் வளங்கள்

நிறுவனத்திடமிருந்தான வருவாய் பிரதான தொழிற்படு நிதி வருமானம், தொழில்சார் பாதுகாப்பு தொடர்புபட்ட பாடநெறிகள், சுகாதார பரிசோதனை மற்றும் சுற்றுப்புறச்சூழல் கண்காணிப்பு நிகழ்ச்சித்திட்டத்தைக் கையாள்வதனால் உருவாக்கப்பட்டதாகும்.

(ஆ) வட்டி

உழைக்கப்பட்ட வட்டி உறப்பட்டதன் அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகின்றது.

iii. பொறுப்புக்கள் மற்றும் ஏற்பாடு

(அ) தொழில் திணைக்களத்தினால் 2012 சனவரி முதல் 2013 யூன் வரை வேதனம் செலுத்தப்பட்ட தே.தொ.பா.சு நிறுவகத்தின் பணிப்பாளர் அதிபதி 2012 ஆம் ஆண்டிலிருந்து இரண்டாம் நிலையில் நியமிக்கப்பட்டுள்ளாரென்று இனங்காணப்படு கின்றது. இந்த நிதி ஆண்டு காலப்பகுதியில் மொத்தச் செலவு 1, 1176,000.00 ரூபாவாகும். இந்தப் பணத்தை தொழில் திணைக்களத்திற்கு அடுத்த ஆண்டு காலப்பகுதியில் திருப்பி வழங்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

(ஆ) உதவுதொகைத் திட்டங்களை வரையறுத்தல் - ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்

பணியாளர்கள் ஊ.சே.நி மற்றும் ஊ.ந.பொ.நி நியதிச்சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளுடன் இணைந்ததாக உதவுதொகைகளுக்கு தகுதியுடையவர்கள். நிறுவகம், பணியாளர்களின் மொத்த வேதனத்தின் 12% மற்றும் 3% இனை முறையே ஊ.சே.நி மற்றும் ஊ.ந.பொ.நிதியாகச் செலுத்துகின்றது.

(இ) ஐந்து வருட கால சேவையை நிறைவுசெய்ததன் பின்னர் மூன்று பணியாளர்களுக்கான பணிக்கொடைக் கொடுப்பனவு

මගේ අංකය / எனது இல. / My No. எல்எச்.டப்ளியு/என்ஐஓஎஸ்எச்/1/17 ඔබේ අංකය / உமது இல. / Your No. දිනය / திகதி / Date 2018 ஆகஸ்ட் 31

**தலைவர்,**
**தேசிய தொழிற்பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான நிறுவனம்,**

**தேசிய தொழிற்பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான நிறுவனத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகார சட்டத்தின் 14 (2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

தேசிய தொழிற்பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொட்ரபான நிறுவனத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவறான நிதி நிலைமை கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று மற்றும் உரிமை மூலதனத்தின் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுகளின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2009 இன் 38 ஆம் இலக்க தேசிய தொழிற்பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான நிறுவனச் சட்டத்தின் 17 (3) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது நிதி அதிகார சட்டத்தின் 14 (2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் ஆண்டிறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமெனினும் நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச் சட்டத்தின் 13(7)(ஆ) ஆம் பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கை ஒன்று 2018 ஜுன் 08 ஆம் திகதி நிறுவனத்தின் தலைவருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிற கூற்றுகளிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுபாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව. இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34 +94 11 2 88 72 23 ag@auditorgeneral.gov.lk www.auditorgeneral.gov.lk

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக் கூற்றுக்ககளின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக் கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்வதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக் கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவனத்தின் நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுபாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவனத்தின் உள்ளகக் கட்டுபாடுகளின் விளைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் மற்றும் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளில் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக் கூற்றுக்களின் ஒட்டு மொத்த சம்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்காக தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2 நிதிக் கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்களைத் தவிர, நிதிக்கூற்றுக்களானவை தேசிய தொழிற் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான நிறுவனத்தின 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ரூபா 937,760 தொகை கிரயத்தையுடைய வீட்டு உபகரணங்கள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் மீளாய்வாண்டின் போது ரூபா 429,000 தொகைக்கு மீள் மதிப்பீடு செய்யப்பட்டு அந்த மீள் மதிப்பீட்டுப் பெறுமதியினை சொத்துக்கள் சேர்க்கப்படல் என காட்டப்பட்டிருந்த போதிலும் அச் சொத்துக்களின் கிரயம் மற்றும் திரண்ட பெறுமானத் தேய்வினை இனங்கண்டு கணக்குகளில் இருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) நியமனத்தின் 43 ஆம் பந்தியின் பிரகாரம் ஆதனங்கள் பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் நியாயமான பெறுமதி சந்தை பெறுமதியின் மீது மதிப்பீடு செய்யப்படுவதன் மூலம் தீர்மானிக்கப்படுவதுடன் அதற்காக ஏற்றுக் கொள்ளப்பட்ட மற்றும்

குறிப்பிட்ட தொழிற்துறையில் தகைமைகள் உடைய, பெறுமதி மதிப்பீடு தொழிலில் அங்கத்தவர் ஒருவரினால் சொத்து ஒன்றின் பெறுமதி, பெறுமதி மதிப்பீடு செய்யப்பட வேண்டுமென குறிப்பிட்டிருந்த போதிலும் நிறுவனத்தின் சொத்துக்களை மீள் மதிப்பீடு செய்த போது அவ்வாறு முறையான தகைமைகளை கொண்ட குழு ஒன்றினால் மீள் மதிப்பீடு மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை.

(iii) நியமத்தின் 49 ஆம் பந்தியின் பிரகாரம் ஆதனங்கள் பொறித் தொகுதிகள் மற்றும் உபகரண விடயங்களை மீள் மதிப்பீடு செய்யும் போது அந்த சொத்துக்களை சேர்ந்த அதனங்கள் பௌதீக தொகுதிகள் மற்றும் உபகரண வகுப்பினை முற்றாக மீள் மதிப்பீடு செய்ய வேண்டும் எனினும் இரண்டு வகுப்புகளின் சொத்துக்கள் ரூபா 15.7 மில்லியன் தொகை கிரயமாகிய விடயங்கள் தொடர்பாக நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(iv) நியமத்தின் 09 ஆம் பந்தியின் பிரகாரம் ஆதனங்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரண வகுப்பொன்று மீள் மதிப்பீடு செய்யும் போது குறிப்பிட்ட நியமத்தின் "அ" முதல் "எ" வரை மேற்கொள்ளப்பட வேண்டிய வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) **இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 02**

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வண்டிற்கான ஊழியர் பணிக்கொடை ஒதுக்கீடு ரூபா 312,393 தொகை எனினும் அது ரூபா 250,278 தொகை என காசுப் பாய்ச்சல் கூற்றில் சீராக்கல் செய்யப்பட்டிருந்தது.

(ii) கூட்டுத்தொகை ரூபா 772.400 தொகையான முன்னைய ஆண்டுகளுக்கான சீராக்கல்கள் மீளாய்வாண்டிற்காக வருமானத்திற்கு சீராக்கல் செய்யப்பட்டிருக்காவிடினும் காசுப் பாய்ச்சல் கூற்றில் பணம் அல்லாத சீராக்கல்களின் கீழ் சீராக்கல்கள் செய்யப்பட்டிருந்தன.

(iii) நிதிசார் பாதிப்புகள் இன்றி நிறுவனத்திற்கு மானியமாக கிடைத்திருந்த மருத்துவ உபகரணங்களுக்காக 04 ஆண்டுகளுக்கான பதிவழித்தல்கள் ரூபா 660,000 தொகை காசுப் பாய்ச்சல் கூற்றில் தொழிற்படு மூலதன சீராக்களின் கீழ் வியாபார மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவைகளின் கீழ் குறைவடைதல் என சீராக்கல் செய்யப்பட்டிருந்தது.

(iv) ஆதனங்கள் பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்காக மீளாய்வாண்டின் போது செலவிடப்பட்டிருந்த தொகை ரூபா 3,997,265 எனினும் காசுப்பாய்ச்சல் கூற்றில் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் தனதாக்கல் என என தளபாடங்கள் மீள் மதிப்பீட்டு பெறுமதியாகிய ரூபா 89,000 தொகையும் உட்பட ரூபா 4,086,265 தொகை காட்டப்பட்டிருந்தது.

(v) ஆண்டிற்காக வட்டி வருமானம் ஆகிய ரூபா 8,673,884 தொகையினை மிகையுடன் சீராக்கல் செய்திருக்காததுடன் பணமாக பெறப்பட்ட வட்டி வருமானம் ஆகிய ரூபா 1,372,664 தொகையினை முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் காசு உட்பாய்ச்சல் என காட்டுவதற்கு பதிலாக காசு வெளிப்பாய்ச்சல் என காட்டப்பட்டிருந்தது.

## 2.2.2 கணக்கீட்டு கொள்கைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவனத்திற்காக 2013 ஆண்டின் போது தேசிய விஞ்ஞான மன்றத்திலிருந்து கிடைத்திருந்த ரூபா 1,650,000 இற்கான நன்கொடையினை கணக்கீடு செய்வதற்காக மீளாய்வாண்டின் போது புதிதாக கணக்கீட்டு கொள்கையொன்று பயன்படுத்தியிருந்த போதிலும் அது நிதிக்கூற்றுகளில் வெளிப்படுத்தியிருக்காததுடன் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 03 இல் 34 ஆவது பந்தியின் பிரகாரம் சுய விருப்பத்துடன் கணக்கீட்டு கொள்கையொன்று பயன்படுத்தும் போது நடைமுறை காலப் பகுதிக்கு மற்றும் முன்னைய காலப்பகுதிக்கு தாக்கல் ஒன்றினை ஏற்படுத்துமாயின் அதனையும் வெளிப்படுத்த வேண்டும் எனினும் அவ்வாறு செய்திருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்காக சமர்பித்திருந்த நிதிக் கூற்றுகளின் பிரகாரம் பொறித் தொகுதிகள் மற்றும் இயந்திரங்களின் ஆக்கபூர்வமான வாழ்க்கைகள் 10 வருடங்கள் என காட்டியிருந்த போதிலும் பெறுமானத் தேய்வு கணக்கிடும் போது வாழ்கைக் காலம் 05 வருடங்கள் என கணித்து பெறுமானத் தேய்வு கணித்தல் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(இ) நிறுவனத்திற்காக 2017 வருடாந்த மதிப்பீட்டின் மூலம் வருவாய் செலவுகளுக்காக ரூபா 2,220,827 தொகையும் மூலதனச் செலவுகளுக்காக ரூபா 2,028,664 தொகையுமாக திறைசேரி நிதி ஏற்பாடுகள் வழங்கியிருந்த போதிலும் அப்பணத்தை கணக்கீடு செய்தல் தொடர்பாக பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 03 இல் 12 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்கீட்டு கொள்கைகளை இனங்கண்டு வெளிப்படுத்தியிருக்கவில்லை.

**2.2.3 கணக்கீட்டு குறைபாடுகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 288,403 தொகை பெறுமதியான Air Sampling – Pumbs model Gil Air 3 RC ஆகிய மருத்தவ உபகரணத்தை 2015 மே 15 ஆம் திகதி முறைப்படுத்துவதற்காக ரூபா 188,700 இற்கான தொகையொன்று செலவிடப்பட்டிருந்ததுடன் அதனை உரிய சொத்துகளுடன் மூலதனப்படுத்தியிருந்ததுடன் மீளாய்வாண்டு வரை கூட்டுத்தொகை ரூபா 75,480 இற்கான பெறுமானத் தேய்வினை கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஆ) மீண்டுவரும் செலவுகளுக்காக திறைசேரியினால் 2017 ஆண்டில் மீளளிப்பு செய்யப்பட்ட ரூபா 308,188 இற்காக மீண்டுவரும் மானியங்களை முலதன மானியங்கள் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) சிறு காசில் இருந்து செலவிடப்பட்டிருந்த ரூபா 15,975 தொகை மீளாய்வாண்டிற்கான செலவுகள் என கணக்கீடு செய்திருக்காததுடன் அதன் காரணமாக ஆண்டிற்கான இலாபம் அதே பெறுமதியால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) நிறுவனத்திற்காக 2013 ஆண்டின் போது தேசிய விஞ்ஞான மன்றத்தில் இருந்து கிடைத்திருந்த ரூபா 1,650,000 தொகை நன்கொடையினை கணக்கீடு செய்த போது மீளாய்வாண்டின் போது ரூபா 165,000 நன்கொடை

பதிவழித்தல் வேறு வருமானம் ஒன்றென கணக்கீடு செய்வதற்கு பதிலாக பெறுமானத் தேய்வு ஒதுக்கக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

(உ) அரச மானியம் அட்டுறு அடிப்படையில் கணக்கீடு செய்துள்ளமையால் அமைச்சில் இருந்து பெற வேண்டிய மீதி ஒன்று என ரூபா 3,628,340 தொகை நிதி நிலைமை கூற்றில் நடைமுறை சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

**2.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்கான நிதி நிலைமை கூற்றில் நடைமுறை அல்லாத சொத்துக்களின் கீழ் திறைசேரி கணக்குகள் என ரூபா 267,500 இற்கான மீதியொன்று 2010 ஆண்டு முதல் 07 வருட பூராகவும் தீர்க்கப்படாமல் காணப்பட்டது அந்தப் பணத்தினை நிதி அமைச்சில் இருந்து பெற்றுக் கொள்வதற்கு முடியாமையினால் எதிர்காலத்தில் பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தலைவரினால் கணக்காய்விற்கு அறிவித்திருந்தது.

(ஆ) நிதிக் கூற்றக்களின் பிரகாரம் சேவை நாடுனரிடம் கிடைத்திருந்த ரூபா 204,137 இற்காக முற்பண தொகையொன்று மீளாய்வாண்டு இறுதி அளவிலும் குறிப்பிட்ட சேவையை வழங்குவதற்கு அல்லது தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. இந்த முற்பணம் தீர்க்கப்படாமல் இருந்த தாமத காலம் 12-30 மாதங்கள் வரையான வீச்சில் இருந்தது.

(இ) 2012 ஜனவரி 01 திகதி முதல் 2013 திசெம்பர் 31 வரை இரண்டு வருட காலத்திற்காக தொழில் திணைக்களத்தில் இருந்து விடுவிக்கப்பட்டிருந்த உத்தியோகத்தர் இந்த நிறுவனத்தின் (பெண்) பணிப்பாளர் நாயகமாக செயற்பட்டிருந்ததடன் சம்பளமாக செலுத்தப்பட்டிருந்த ரூபா 1,170,996 இற்கான தொகை மீண்டும் தொழில் திணைக்களத்திற்கு மீளளிப்பு செய்யும் படி கேட்டிருந்தது அதன் பிரகாரம் 2013 ஆண்டின் போது இந்த மொத்த சம்பளச் செலவுகளுக்காக ஒதுக்கம் ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் 05 வருட காலம் கடந்திருந்த போதிலும் இந்த பொறுப்புக்களை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 3 நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுகளின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகள் ரூபா 18,534,446 மிகையொன்று காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மிகை ரூபா 15,801,620 தொகையாக இருந்தது. அதன் பிரகாரம் முன்னைய ஆண்டிற்கு நேரொப்ப மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 2,732,826 இற்கான வளர்ச்சி ஒன்று அவதானிக்கப்பட்டது. ஆண்டிற்கான செயற்பாட்டு வருமானம் ரூபா 5,391,978 இனால் அதிகரித்திருந்த மேற்கூறிய வளரச்சிக்கு முக்கிய காரணமகியுள்ளது.

மீளாய்வாண்டினதும் கடந்த நான்கு ஆண்டுகளினதும் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2014 ஆண்டின் போது ரூபா 19,441,777 தொகையான மிகை 2017 ஆண்டளவில் ரூபா 18,534,446 வரை குறைந்திருந்தது. ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறை அல்லாத சொத்துக்களுக்கான பெறுமானத் தேய்வு ஒதுக்கத்தை கவனத்தில் எடுத்த பின்னர் நிறுவனத்தின் ஒட்டு மொத்த பங்களிப்பு 2013 ஆண்டின் போது ரூபா 17,104,796 தொகையாக காணப்பட்டதுடன் 2015 ஆண்டின் போது ரூபா 12,721,122 வரை வீழ்ச்சி அடைந்திருந்தது . எவ்வாறாயினும் மீளாய்வண்டின் போது அது ரூபா 28,918,806 தொகை வரை வளர்ச்சியடைந்திருந்தது

## 4 செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றுகை

#### 4.1.1 திட்டமிடல்

நிறுவனத்தினால் 2017-2022 காலப்பகுதி தொடர்பாக கூட்டினைந்த திட்டமொன்று தயாரித்திருந்ததுடன் நிறுவனத்தினை நிறுவிய குறிக்கோள்களை நிறைவேற்றி கொள்வதற்காக நிறுவனத்தில் காணப்படும் பலம் , பலவீனம் மற்றும் வர்த்தக சுற்றாடலில் காணப்படும் சந்தர்பங்கள் மற்றும் தடைகள் தொடர்பாக மதிப்பாய்வு செய்திருக்கவில்லை.

உரித்தாக்காமல் அதனது மூலதனச் செலவுகள் என மீளாய்வாண்டின் போது ரூபா 1,121,965 இற்கான தொகையொன்றும் கடந்த ஆண்டின் போது ரூபா 5,644,437 தொகையும் செலவிடப்பட்டிருந்தது.

### 4.4 பதவியணியினர் நிருவாகம்

நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டு 09 வருடங்கள் கடந்துள்ள போதிலும் பதவியணியினர் வெற்றிடம் நீண்ட காலமாக காணப்பட்டதுடன் மீளாய்வாண்டு இறுதியில் சிரேஷ்ட முகாமைத்துவத்தின் 04 பதவிகளும், செயற்பாட்டு மட்டத்தில் 04 பதவிகளும் 08 வெற்றிடங்களும் காணப்பட்டன.

## 5. நிலைபேறான அபிவிருத்தி

### 5.1 நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்களை நெருங்குதல்

நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 ஆண்டு "நிகழ்ச்சி திட்டத்தின்" பிரகாரம் அனைத்து அரசாங்க நிறுவனங்களினாலும் செயற்பட வேண்டிக் காணப்பட்டதுடன் மீளாய்வாண்டு தொடர்பாக தேசிய தொழிற் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான நிறுவனத்தினால் தனது நோக்கெல்லையின் கீழ் காணப்படும் கருமங்கள் தொடர்பாக எவ்வாறு செயற்பட வேண்டும் என அறிந்திருக்கவில்லை. அதனால் அந்த கருமங்களுடன் தொடர்பான நிலைபேறான அபிவிருத்தியின் குறிக்கோள்கள், இலக்குகள் மற்றும் அந்த இலக்குகளை நோக்கி நெருங்க வேண்டிய திருப்புமுனைகளும் அந்த இலக்குகள் மீது நெருங்குவதை அளவை செய்வதற்கான சுட்டிகளையும் இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 6 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 பெறுகை மற்றும் ஒப்பந்த வேலை செயற்பாடுகள்

#### 6.1.1 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவனத்தின் போக்குவரத்து தேவைகளுக்காக சொகுசு வான் மற்றும் கார் வாடகைக்கு பெறுவதற்காக கூறுவிலைகள் அழைக்கப்பட்டிருந்த போதிலும் விலைகூறல் மதிப்பாய்வு செய்யும் போது நிறுவனத்தின் போக்குவரத்து தேவைக்காக "நெநோ கப் சேவை" போதியது என பின்னர்

உரித்தாக்காமல் அதனது மூலதனச் செலவுகள் என மீளாய்வாண்டின் போது ரூபா 1,121,965 இற்கான தொகையொன்றும் கடந்த ஆண்டின் போது ரூபா 5,644,437 தொகையும் செலவிடப்பட்டிருந்தது.

**4.4 பதவியணியினர் நிருவாகம்**

நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டு 09 வருடங்கள் கடந்துள்ள போதிலும் பதவியணியினர் வெற்றிடம் நீண்ட காலமாக காணப்பட்டதுடன் மீளாய்வாண்டு இறுதியில் சிரேஷ்ட முகாமைத்துவத்தின் 04 பதவிகளும், செயற்பாட்டு மட்டத்தில் 04 பதவிகளும் 08 வெற்றிடங்களும் காணப்பட்டன.

**5. நிலைபேறான அபிவிருத்தி**

**5.1 நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்களை நெருங்குதல்**

நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 ஆண்டு "நிகழ்ச்சி திட்டத்தின்" பிரகாரம் அனைத்து அரசாங்க நிறுவனங்களினாலும் செயற்பட வேண்டிக் காணப்பட்டதுடன் மீளாய்வாண்டு தொடர்பாக தேசிய தொழிற் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான நிறுவனத்தினால் தனது நோக்கெல்லையின் கீழ் காணப்படும் கருமங்கள் தொடர்பாக எவ்வாறு செயற்பட வேண்டும் என அறிந்திருக்கவில்லை. அதனால் அந்த கருமங்களுடன் தொடர்பான நிலைபேறான அபிவிருத்தியின் குறிக்கோள்கள், இலக்குகள் மற்றும் அந்த இலக்குகளை நோக்கி நெருங்க வேண்டிய திருப்புமுனைகளும் அந்த இலக்குகள் மீது நெருங்குவதை அளவை செய்வதற்கான சுட்டிகளையும் இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**6 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**6.1 பெறுகை மற்றும் ஒப்பந்த வேலை செயற்பாடுகள்**

**6.1.1 பெறுகைகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவனத்தின் போக்குவரத்து தேவைகளுக்காக சொகுசு வான் மற்றும் கார் வாடகைக்கு பெறுவதற்காக கூறுவிலைகள் அழைக்கப்பட்டிருந்த போதிலும் விலைகூறல் மதிப்பாய்வு செய்யும் போது நிறுவனத்தின் போக்குவரத்து தேவைக்காக "நெநோ கப் சேவை" போதியது என பின்னர்

தீர்மானித்திருந்ததுடன் அதற்காக ஒரு விலை கூறல் மாத்திரம் கிடைத்திருந்தது. அதன் பிரகாரம் நிறுவனத்திற்கு சிறந்த விலைக்கு (Best price) சேவையை பெற்றுக் கொள்வதற்கு இருந்த சந்தர்ப்பத்தை இழந்துள்ளது.

(ஆ) 2006 அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் பந்தி 6.3.2 இன் பிரகாரம் தாமதித்து கிடைக்கும் விலை கூறல்களை ஏற்றுக்கொள்ளக் கூடாது எனினும் விலைகூறல்களை திறக்காமல் திருப்பி அனுப்ப வேண்டும். மீளாய்வாண்டின் போது நிறுவனத்திற்காக ரூபா 150,000 தொகை பெறுமதியான 03 எடுத்துச் செல்லக் கூடிய ஹிமொக்லொபின் பகுப்பாய்வு இயந்திரம் (Portable Hemoglobin Analyzers ) மற்றும் ஒன்று ரூபா 65 வீதம் 600 ஸ்டிரிப் (Strip) கொல்வனவு செய்யும் போது விலைகூறல் அழைப்புப் பதிவேடுகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு விலைகூறல்கள் சமர்பிக்க படவேண்டிய முடிவு திகதிக்கு பின்னர் ஒரு திகதியில் கூறுவிலை சமர்பித்திருந்த நிறுவனம் ஒன்றில் இருந்து குறிப்பிட்ட பண்டங்கள் கொல்வனவு செய்திருந்தது.

## 7 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுபாட்டு குறைபாடுகள் அவ்வப்போது தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. பின்வரும் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்த வேண்டும்.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பரப்புகள் | அவதானிப்புகள் |
|---|---|
| (அ) வருமானத்தை இனங்காணல் | • இன்வொயிஸ்கள் வழங்கப்படாமல் வருமானங்கள் இனங்கண்ட சந்தர்பங்கள் காணப்படல். |
| (ஆ) பதவியணி நிருவாகம் | • நிறுவனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காக அத்தியவசியமான முக்கியமான வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்திருக்காமை. |

| | | |
|---|---|---|
| (இ) | தகவல் தொழில்நுட்ப பொதுவாக நிருவாகம் | நிறுவனத்திற்கு சொந்தமான தொழில்சார் விபத்துகள் தொடர்பாக தரவு முறைமையொன்று நிறுவப்பட்டு பேணப்படாமை |
| (ஈ) | பெறுகை செயற்பாடு | • விலைகூறல்களை திறக்கும் திகதி, நேரம், இடம் என்பவற்றுடன் விலை கூறல் அழைப்பு பதிவேடு தயாரித்திருக்கவில்லை.<br>• விலைகூறல்கள் திறப்பதற்காக குழு ஒன்று நியமனம் செய்யப்பட்டு அங்கீகரித்து இருக்காமை.<br>• விலைகூறல் திறத்தல் பதிவு செய்வதற்கு பெறுகை வழிகாட்டல் கோவையின் குறிப்பிட்ட படிவங்களை பயன்படுத்தி இருக்காமை. |

ஒப்பம்./எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

எச்.எம் காமினி விஜேசிங்க
கணக்காய்வாளர் தலைமை அதிபதி